
# தேடும் தேசம்



சி. ரஜிவ்காந்த்

# தேடும் தேசம்

(கவிதைத் தொகுப்பு)

சி. ரஜிவ்காந்த்
உயிரியல் பிரிவு மாணவன்
சிவானந்தா வித்தியாலயம்
கல்லடி உப்போடை
மட்டக்களப்பு

மறுகா
பதிப்பகம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தேடும் சேம் |
| ஆசிரியர் | : | சி. ரஜிவ்காந்த் |
| பொருள் | : | கவிதை |
| முதல் பதிப்பு | : | பங்குனி 2002 |
| உரிமை | : | ஆசிரியர் |
| பக்கம் | : | X + 53 |
| அட்டைப் படம் | : | நிர்மலவாசன் |
| கணினி வடிவமைப்பு | : | St. Ignatiou Type Setting<br>*28, Sinnalebbe Street, Batticaloa.* |
| பதிப்பு | : | மறுகா ஆரையம்பதி |
| விலை | : | 75/= |

அன்பூட்டி அறிவூட்டி
அவனியிலே அண்டவைக்க
தென்பூட்டி தெளிவூட்டி
ஓய்வில்லா துழைக்கின்ற - நாலு, இரு
சொல்லூட்டி சேயென்னில்
உய்வுகாண உள்ளுகின்ற
என்முதுசம் அன்னை, தந்தையாம்
திரு, திருமதி சிவசிதம்பரம் அவர்கட்கும்
தண்தமிலூட்டி மெழுகுபோல
தனக்கென்றே வாழாமல்
எண்ணெழுத்தூட்டி அகரத்தை
அறியாத நாட்தொட்டு
நல்துணிவூட்டி கவிபாட
தமிழ்தந்த என்குருபோன்ற
திரு. வே. குழந்தைவேல் அவர்கட்கும்
நல்லறமூட்டி மாணவர்க்கு
நற்பண்பூட்டி ஒளிகாட்டி
நல்லனவூட்ட வந்த என்
முதற் கவிநூல் சமர்ப்பணம்

# அணிந்துரை

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் முத்திரை பதித்து, அமரராய் தமிழறிஞர் நெஞ்சங்களிலெல்லாம் வாழ்ந்து கொண்டிருப்பவர் வித்தகர் விபுலாந்த அடிகளார். அவருடைய எண்ணக் கருவூலமாய் ஓங்கி உயர்ந்து நிற்கும் சிவாநந்த வித்தியாலயத்தின் மாணவனாகிய செல்வன் ரஜீவ் காந்தின் கருத்திலும் கற்பனையிலும் அரும்பிய மொட்டுக்கள் இன்று தேடும் தேசமாய் மலர்ந்து நிற்கின்றன.

கவிதை என்பது அழகான ஓர் இலக்கிய வடிவம் தான் சொல்ல வந்த கருத்தைத் தேதர்ந்தெடுத்த அழகிய சொற்களால் ஓசைநயமும் உணர்ச்சிகளும் வெளிப்பட, படிப்பவர் மனதில் திருப்திகரமான நிறைவை ஏற்படுத்தும் வண்ணம் மிக நேர்த்தியாகப் புனையப் படுகின்ற ஒரு கலைவடிவம் அது.

வெறுமனே சொற்களை அடுக்கி, தாம் சொல்ல வந்த கருத்துக்களுக்கு ஓசை அமைப் பொன்றைக் கொடுத்துத் தொடுப்பது கவிதையாக மாட்டா. நல்லதொரு கவிதை படிப்பது அழகான ஓர் ஓவியத்தை இரசிப்பது போன்ற ஓர் உணர்வைத் தரவேண்டும். செவிக்கினிய சொற்களை, சிந்தையைத் தொடுகின்ற கருத்துக்களிற் தோய்த்துக் கலையழகு வெளிப்படக் கோத்துத்தருபவனே கவிஞன்.

தான் வாழும் காலத்தின் தேவைக்கேற்ப அந்தக் காலத்து வாழ்க்கைச் சுவடுகளாக, வரலாற்றுப் பதிவுகளாக அவ்வக்காலப் பகுதியில் புனையப்படும் கவிதைகள் அமைகின்றன. இந்த வகையில் ரஜீவ்காந் வடித்தெடுத்துள்ள கவிதைகள் திசைமாறிப் போக முயல்கின்ற மாணவ சமுதாயத்துக்கு நல்ல பாதை காட்ட வேண்டும் என்ற உந்துதலின் விளைவாய் எழுதப்பட்டவை என்ற கருத்தைத் தோற்றுவிக்கின்றன.

இலக்கிய உலகுக்குப் பல கவிஞர்களையும், காத்திரமான எழுத்தாளர்களையும் உருவாக்கித் தந்த ஆரையம்பதி மண்ணின் இளங்குருத்து ரஜீவ்காந் கல்லூரிப் பருவத்தின் விளையாட்டுத் தனங்களுக்கப்பால் தான் சார்ந்த மாணவ சமுதாயம் பற்றிய ஒரு தீவிரமான சிந்தனையும் தீர்க்கமான முடிவுகளும் கற்பனையும் ஊற்றெடுத்ததால் அவற்று க்குக் கவிதை வடிவம் கொடுத்து, பயனுள்ள ஒரு செயற்பாட்டில் முனைந்திருக்கிறார்.

மாணவனாக இருந்து கொண்டு கவிதைத் தொகுதி வெளியிடுவதென்பது துணிச்சலான ஒரு செயற்பாடு. இந்த அரும் முயற்சிக்கு ஆதரவு வழங்கிய இம்மாண வனது பெற்றோரும் பாராட்டுக்குரியவர்களே.

மாணவர்களது கவனத்தைத் திசைதிருப்பவல்ல ஊடகங்கள் மலிந்துவிட்ட இந்தக் காலப் பகுதியில் அவ்வகை ஊடகங்களின் சவால்களை எதிர்கொண்டு ஒரு கவித்துவ உள்ளம் தலையெடுக்க விழைவதை நாம் இந்தக் தொகுதிமூலம் உணரலாம்.

இவருடைய கவிதைகள் எல்லோராலும் பேசப்படுகின்ற போர், சமாதானம், காதல், பிரிவு, இயற்கை போன்ற இன்னோரன்ன அம்சங்களைக் கொண்டவையல்ல. அவர் தன் போன்ற மாணவர்களிடம் அறக்கருத்துக்களை எடுத்துச் சொல்லி அவர்களை நல்வழிப் படுத்த முயல்கிறார். வாழ்வின் உயர்வுக்கு எது தேவை என்பதை எடுத்துச் சொல்கிறார். எப்படி எப்படி வாழவேண்டும் என்று மார்க்கம் கூறுகின்றார்.

'இவை போதும் எப்போதும் வெற்றிக்கு'
என்னும் கவிதையில்

'எரிகின்ற நெருப்பு அனைத்தையும் அழிக்கும் - உன்னில்
எரிகின்ற கோபம் உன்னையும் அழிக்கும்
வருகின்ற வெள்ளம் பெருமரத்தையே விழுத்தும் உன்னில்
எழுகின்ற உயர் கொள்கை உலகையும் உயர்த்தும்'

என்று தன் சகாக்களுக்காக மட்டுமல்லாமல் எல்லோருக்கும் சேர்த்தே ஆலோசனை கூறுகின்றார். இப்படியான கவிதைகள் மூலம் ஒரு பண்பட்ட கவிஞனின் மனப்பாங்கை இவரிடம் காண முடிகிறது.

'தேடும் தேசம்' என்னும் கவிதையில் அவர் தேடும் தேசத்து மனிதன் மூலம் அவர் நெஞ்சின் ஆழத்தை, அங்கே குடிகொண்டிருக்கும் மானுட நேயத்தைக்கண்டு வியக்காமலிருக்க முடியவில்லை.

'மண்ணை விரும்பும் பேதைமை கொன்று
பெண்மையை மதிக்கப் போதனை செய்து
தன்கை அரும்பும் வியர்வையைக் கொண்டு
பிறர்படும் துயரினைத் தீர்த்துநின்று
தென்னை போலிங்கு தெய்வமாய் வாழும்
மனிதனை மண்கொண்ட புவியினில் தேடுகின்றேன்.'

பொன் போன்ற வாழ்வை வெறும் மண்ணாசையால் மண்ணாக்குவோரும், போற்றி வழிபட வேண்டிய பெண்மையை காலடியில் போட்டுக் கசக்கி முகர்வோரும் அடுத்தவன் உழைப்பை உறிஞ்சி வாழ்வோரும் மலிந்துவிட்ட இந்தத் தேசத்தின் மக்களுக்கே இந்தக் கவிதைமூலம் புத்தி புகட்டவரும் இவ்விளம் கவிஞரது கருத்துக்கள் நம் உள்ளத்தைக் கவர்கின்றன.

வை தோரின் வாழ்த்துக்கள் பெற்று - எதற்கும்
வாலாட்டும் நாய்களை விட்டு
நைவாரின் வாழ்வுக்கு ஒளியென நின்று
நம் நாட்டை எழில் பெறச் செய்து
மைவாங்கும் விழிமாதை மாதாவென்று - தமிழ்ப்
பண்பாட்டைச் செழிப்புறச் செய்து - எமைக்
கொய்வார்க்கும் நல்லதே செய்து - இந்தக்
குவலயத்தை நல் வழி நடத்து.

என்று வீரத்தாலாட்டு என்னும் கவிதையில் இவ்விதம் உயர்ந்த குறிக்கோளை எடுத்துக் கூறும் பண்பைக் காண்கின்றோம். அனேகமாக இவருடைய கவிதைகள் அனைத்தும் இப்படியான அறக்கருத்துக்களைக் கூறுபவையாக அமைந்திருப்பது படிப்போரின் மனதில் இவர்பால் ஓர் ஆழ்ந்த நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது.

மொத்தத்தில் பார்க்கும் போது ரஜீவ்காந்தின் கவிதைகள் மூலம் அவரிடம் இயல்பாகவே அமைந்துள்ள கவித்துவம், சொற்களைத் தேர்ந்தெடுத்து லாவகமாகக் கையாளும் திறன், சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளைக் களைந்தெறிய வேண்டும் என்ற வேட்கை, சொல்ல நினைப்பதை அப்படியே சொல்லி விடுகின்ற துணிச்சல் ஆகியவற்றின் ஒட்டு மொத்தமான வடிவம் தெரிகிறது.

அனுபவக் குறைவு, கவிதைகளில் ஆழ்ந்த ஈடுபாடின்மை ஆகியவற்றால் கவிதை அமைப்பு முறையிலும் சந்தச் செறிவிலும் சில குறைபாடுகள் தெரிகின்றன. அதுமட்டுமல்லாமல் ஒரு பொருளைப்பற்றி மிக நீண்ட கவிதை அமைக்கும் வழக்கமும் படிப்போருக்குச் சலிப்பூட்டுவதாக இருக்கலாம். இனிவரும் காலங்களில் அவர் பெறப்போகும் கவிதை பற்றிய அனுபவங்கள், ஆழ்ந்த வாசிப்புப்பழக்கம், தெளிவான சிந்தனை ஆகியவை இக்குறைபாடுகளை நீக்கி ரஜீவ் காந்தை ஒரு பண்பட்ட மனிதனாக வளர்த்தெடுக்கும் என்பதில் ஐயமில்லை.

**திருமதி அ. யோகராஜா**
மண்டூர் அசோகா

# வாழ்த்துச் செய்தி

**பழைய இலக்கியங்களைப் பேணுதலும் புதிய இலக்கியங்களைப் படைப்பதும்.**

சுருங்கக் கூறி விளங்கவைக்கும் ஒரு காலக்கண்ணாடி கவிதை. பழைய இலக்கிங்கள் கூறும் எமது விழுமியங்களைக் கற்றுணர்ந்து சமகால இயல்புக்கேற்ற மரபுக்கவிதை புனைந்து அறக்கருத்துக்களை வெளிப் படுத்தும் இந் நூலை காலத்தின் தேவையாகவே கொள்ளமுடியும் மறக்கருத்துக்கள் மேலோங்கியுள்ள இன்றைய உலக நிகழ்வுகளில் அறங் கூறப்புகும் இந்த இளங்கவிஞரது முயற்சியை அனைவரும் பாராட்டவே செய்வர்.

நல்லதோர் இளங்கவித்துவத்தை இந் நூலில் கண்டு தெளிய முடிகிறது. இந்த இளங்கவிஞரின் எதிர் காலம் சிறந்து விளங்க பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திருவருள் பாலிப்பதாக

எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைபணியில்
சுவாமி அஜராத்மானந்தா
(சுவாமி அஜராத்மானந்தா)

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

சீர் புகழும் சிவாநந்த வித்தியாலயத்தில் கல்வி பயிலும், மாணவர் மத்தியில் பல்வேறு வகையான திறன்கள் வாய்க்கப்பெற்றுள்ளன. அத்தகைய மாணவருள் கவிதைத் திறன் வாய்ந்த சி. ரஜிவ்காந்த் எனும் மாணவன் தேடும் தேசம் என்னும் கவிதைத் தொகுதியை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவர்கள் இன்று நவநாகரிகத்தில் மூழ்கி சமுதாய சீர்கேடுகளில் ஈடுபட்டு வாழ்வின் பாதையைத் திசைதிருப்பிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்திலே மாணவர் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டிய கருத்துக்களையும் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய கருத்துக்களையும், ஊக்கத்தோடு உற்சாகமாய் செயற்பட வேண்டிய கருத்துக்களையும் மையமாகக் கொண்டு இக்கவிதைகள் யாவும் படைக்கப்பட்டுள்ளன. எதுகை, மோனை அணிகளைக் கையாண்டு கவிதையை யாத்த எமது வித்தியாலய மாணவனின் கவிதை ஆற்றல் மேலும் வளர என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். கவிதைத்தொகுதியை வெளியிட உறுதணையாக இருந்த இம்மாணவரின் பெற்றோர்களை விசேடமாகப் பாராட்டுகின்றேன். அத்தோடு இக் கவிதைத் தொகுதி வெளிவர உதவிய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன். இவரைப் போல் பல மாணவர்கள் கவிதைத் தொகுதி, சிறுகதைத்தொகுதி போன்றவற்றை வெளியிட முன்வர வேண்டுமென அவாவுகின்றேன்.

செல்வன் ரஜிவ்காந்தின் உள்ளத்தில் அரும்பிய கவிதைத்துளி பல்கிப் பெருகி பெருக்கெடுத்து ஓடவேண்மென எல்லாமம்வல்ல இறைவனை வேண்டி என் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

P. ஆனந்தராஜா
சிவானந்த வித்தியாலயம்.

# என்னுரை

'புது நூற்றாண்டினுள் புகுந்து புதுமைகள் கண்டு, பழமையை வென்று, வெற்றி நடைபோடும் இக்காலகட்டத்தில் நம் பண்பாட்டை இளந்தலைமுறை மறக்கின்றதே' எனும் ஏக்கக் குரல் உலகின் கண் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு அவர்களின் அறிவீனம் காரணமேயில்லை. எம் அரும்பண்பைப் பற்றி அறிந்து கொள்ள நேரமின்மையும், விருப்பின்மையுமே காரணமாகும். இதனை புலனிருத்தி இளந்தலை முறையின் சார்பாக சில கருத்துக்களை வெளிப்படுத்த எண்ணியதால் வந்த கலை வண்ணமே உங்கள் கைகளில் கவித்தொகுப்பாய் தவழுகின்ற என் முதல் நூலாகும்.

இது தமிழின்பம் தரும் மரபுக் கவிதையாகவே பின்னப்பட்டுள்ளது. காலத்திற்கேற்ற கோலம் போடாவிட்டாலும் இளந்தமிழில் இளந்தலைமுறையின் இனிய இதயங்களில் விழிப்புணர்வுமிக்க தாக்கத்தை ஏற்படுத்த எண்ணியே இக்கவிதைகள் கலையுருப்பெற்றன. புதுக்கவிதை எனும் புயல் வீசிக்கொண்டுள்ள இந்நிலையில் நான் மரபுக்கவிதை எனும் மிகச்சிறிய கட்டுமரத்தை பரந்த இலக்கியக் கடலில் விட்டுள்ளேன். ஏனெனின் கவியாற்றலை வெளிப்படுத்தவும் நற்கருத்தை நயம்பட நவிலவும் ஏற்புடையது மரபுக்கவிதையே என்பது எனது எண்ணம்.

நான் இந்த நூலிலே காதலைப் பாடவோ, காதலிளம் பெண் அழகினைப் பாடவோ, காதலின் கூடலைப் பாடவோ. அது தரும் தேடலைப் பாடவோ, அதன் பின்வரும் ஊடலைப் பாடவோ, கவிஞரைப் பாடவோ, வறுமையைப் பாடவோ, இன்னல் மிகு போர் நிலைமையை பாடவோ, கடல், வான், மேகம், நிலவென்று இயற்கையைப் பாடவோ இச்சைப்படவில்லை. எனவே என்னுள் எழுந்த கொச்சைத் தமிழால் அறக் கருத்துக்களை மட்டுமே கூறவேண்டுமென்ற உறுதியுடன் இக்கவிதைகளை யாத்தேன்.

நான் கவிதையென்றால் என்னவென்று தெரியாத 6ம் வகுப்பில் கற்கும்போது எழுதிய மரபுக்கவிதை எனக்கு எதிர்பாராத பாராட்டைத் தந்ததுடன் கவியார்வத்தையும் கூடவே தந்தது. நான் இந்தளவாவது கவிதை எழுதத் தக்க ஆற்றலை எனக்களித்தவர் என்னன்புக்குரிய மாமனாரான திரு வே. குழந்தைவேல் அதிபராவார். மேலும் எனது குடும்ப ஊக்குவிப்பும் உறுதுணையாய் அமைந்தது. ஏன் இதை இயம்புகின்றேன் என்றால் மாணவருடைய திறமைகள் மேகம் மறைத்த நிலவாகக் கூடாது என்பதற்காகவேயாகும். எனவே எதற்கும் முதலளிக்கும் பாராட்டே ஒருவனை பன்மடங்கு உயர் வடையச் செய்யும். என் கவித்தொகுப்பிற்கும் கூட.

எனது இந்நூல் வெளிவர பலவிதத்திலும் உதவிகளை நல்கிய கலாச்சார உத்தியோகத்தர் த. மலர்ச்செல்வன் மற்றும் கணினி வடிவமைத்த திரு. இ. கிறிஸ்ரி அவர்களுக்கும், நூல்வெளியீடு சம்பந்தமாக அணுகிய வேளையில் புதுமைமிகு இச்செயலை செய்யவேண்டுமென்ற துணிவூட்டி ஆசியுரையளித்த சுவாமி அஜராத்மானந்தா, அதிபர், தெ. ரவீந்திர மூர்த்தி ஆசிரியர் ஆகியோருக்கும், என் கவிதைகளை நோக்கி, அதிலுள்ள குற்றங்களைந்து பல ஆலோசனைகளை வழங்கி எனக்காக நேரத்தை அர்ப்பணித்து அணிந்துரை தந்த அன்புக்கும் மதிப்புக்குரிய ஆசிரியை மண்டூர் அசோகா அவர்கட்கும், விளம்பரங்களை தந்துதவிய நிறுவனங்களுக்கும், அட்டைப்படத்தை எண்ணியவாறு எனக்களித்து ஆலோசனை வழங்கிய திரு. க. சரவணபவான் (பவான்), நிர்மலவாசன் அவர்கட்கும், குறிப்பாக என் மதிப்புமிகு சகோதரர் திரு. சி. சிவகுமார் அவர்கட்கும் மற்றும் செல்வி. வே. சந்திரேஸ்வரி அவர்கட்கும், எனது நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எனது நூல் அறம், பொருள், இன்பமெனக் கவி தராதது என்பது உண்மை. ஆனால் "பழைய இலக்கியங்களை பேணுவதிலும் புதிய இலக்கியம் படைப்பது பன்மடங்கு மேலானது" என்ற ஜார்ஜ் பேனாட்ஷோவின் கருத்திற்கு அமைவாக சிறிய வனான என்னால் மிகக் குறுகிய காலப்பகுதியில் யாக்கப்பட்ட இந்நூலின் குறைகளை களைந்து இதை ரசிப்பதும், ருசிப்பதும், களிப்பதும், கழிப்பதும் உங்களைப் பொறுத்ததே.

என் கவிதையில் தங்களுக்குகந்த நற்கருத்துக்கள் இருந்து அது உங்களிடத்தில் பயன்மிகு பாதிப்பை உருவாக்குமேயானால் அது அடியேனின் அயரா சிறு முயற்சிக்குக் கிடைத்த பெரு வெற்றியேயாம். அத்துடன் எமது மாணவ சமுகத்தில் இருந்து நல்ல பல நூல்கள் வெளியாக வேண்டுமென்றும் அதற்கு அனைத்து மாணவர்களும் முழு ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பையும் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன். நான் மீண்டுமொரு முறை வேறு ஆக்கத்தினூடாக தங்களை சந்திக்க இறைவன் அருள்வானென்ற நம்பிக்கையோடும், ஏழு வருடக் கனவு இந்நூல் வாயிலாக நனவாவ மகிழ்ச்சியோடும் தங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்.

**ஆரையூர் அன்பன்**
**சிவசிதம்பரம் ரஜீவ்காந்த்**
**17.09.2001**

| தலைப்பு | பக்க எண் |
|---|---|

01. கிட்டவரும் வண்ணச் சிட்டு நீயே 01
02. புவியிலே வந்த பூக்கள் 02
03. முத்தே என் முத்தாரமே 03
04. எனது இலட்சியம் - உனது இலட்சியம் 04
05. இதழ் மூடாத முல்லை மலரே 05
06. புது நூற்றாண்டுப் பெண்ணுக்கு 06
07. விடிவு காண்போம் 08
08. காதலித்து விடு 10
09. விரைந்து வருவாயா? 15
10. பாதையில் விலாகாதே 15
11. உறங்கும் மனிதர் பாதை இது 16
12. தாய் உழைக்கின்றாள் 16
13. வாழ்வை வாசந்தருவதற்கு 17
14. இவை போதும் வெற்றிக்கு 19
15. வாழ வழி தெரியவில்லை 20
16. அணையாத அன்பு 21
17. தேடும் தேசம் 24
18. இதுவெல்லாம் இங்கு ஏனோ? 26
19. உனக்கேது துன்பம் 27
20. அகரம் முதல் னகரம் வரை அறநெறிகள் 28
21. தேடல்கள் 32
22. பதிலுரைப்பாய் தோழனே 33
23. வீரத்தாலாட்டு 34
24. ஆட்டமெல்லாம் அழைப்பு வரைக்கும் 36
25. புறப்படு புகழுடைய மனிதனாக 37
26. இறைவனுடன் ஓர் நேர்காணல் 42
27. மேன்மையுற்று வாழ்வதற்கு 45
28. மண்ணுக்குள் போவதற்கு முன் 47

## கிட்டவரும் வண்ணச் சிட்டு நீயே

வட்ட நிலாப் பொட்டு வைத்து
கிட்ட வரும் வண்ணச் சிட்டே

குற்றமில்லா வாழ்க்கை காண
வற்றாத அன்பைக் கொண்டு
கொற்றமிது சிறக்க வென்று
பெற்றெடுத்தாள் அன்னை உன்னை
உற்றதுயர் தீர்க்க வென்று
உலகுதித்த கண்ணனைப் போல்
மற்றவர்க்காய் உழைக்க வென்று
வந்துதித்தாய் (வட்ட.....)

களங்கமில்லா கைகள் தொட்டு
காலமெல்லாம் கொஞ்சும் சிட்டே - தீய
பழக்கமில்லா உன்னிதழில் தேனாய்
இனிக்கும் நல் முத்த மிட்டே
வழங்குகின்ற தாயின் அன்பை
தளராமல் பெற்றுக் கொண்டு
விளங்குகின்ற புகழ் படைக்க
வந்துதித்தாய் (வட்ட........)

அழுக்குஇல்லா அறிவு பெற்று
அன்பினில் சிறந்து நின்று
உலகுக்கு ஒளி கொடுத்து
உன்னதநற் சேவை செய்து
பலருக்கும் பணி புரிந்து
பண்புதனில் உயர்ந்து நின்று
மலருக்கே மணங் கொடுக்கவென்று
வந்துதித்தாய் (வட்ட.....)

## நட நல்வழியில்

கொன்றை வேந்தன் ஆத்தி சூடி
கொடுத்துச் சென்றாள் ஔவைப்பாட்டி
நன்கே யிதைநீ ஏற்றிப் பாடி
நல்வழியில் நடப்பாய் தம்பி

## புவியிலே வந்த பூக்கள்

புவிதனில் வந்த பூக்கள் - நீங்கள்
புகழ் பெற்று வாழ வேண்டும்

அன்னையின் மடியில் வீழ்ந்து
அறநெறி கற்று என்றும்
தன்னையே உயர்த்திக் காட்டும்
கல்வியை கற்க வென்று (புவிதனில்....)

தந்தையின் சொல்லைக் கேட்டு
மந்திரம் அதுவே என்று
விந்தைகள் பலதும் செய்து
வியப்புற வாழ வென்று (புவிதனில்....)

ஆசானில் அன்பு கொண்டு
ஆசையுடன் கல்வி கற்று
வாசபாலர் போன்று இங்கே
பாசம் பொழியவென்று (புவிதனில்....)

அண்ணனில் பணிவு கொண்டு
தங்கையில் பரிவு கொண்டு - மாயக்
கண்ணனில் பக்தி கொண்டு
கவலை யற்று வாழ்வதற்கு (புவிதனில்....)

பெரியோரின் வழியில் நின்று
பெற்றோரை பேணிக் கொண்டு
வறியோர்க்கு உதவி செய்து
உலகினை உயர்த்த வென்று (புவிதனில்.....)

## படி தம்பி

நல்வழி, வாக்குண்டாம் நவிலநல் குறளுண்டாம்
வெல்லவழி அதிலுண்டாம் கவிதைநற் திறனுண்டாம் - எம்
அல்வழி தாக்குண்டால் எம்மில் நல் உயர்வுண்டாம்
கல்தம்பி இதை நன்றாய் நாளைய விடிவுக்காய்.

## முத்தே என் முத்தாரமே

முத்தே என் முத்தாரமே - என்
முதுகில் வந்து உட்காரு நீ.

வித்தே என் வெண்ணிலவே
மண்ணில் நின்று விளையாடு நீ
சத்தே என் சக்கரையே
சத்துமிக்க கதைகூறு நீ - பூங்
கொத்தே என் குடிசையிலே
பொங்கு தமிழ் கவிபாடும் (முத்தே....)

பூத்தே புகழ்பாடும் பூங்காற்றே - உன்
பொன்விழிகள் விழித்திருக்க சிரித்தாடு
பார்த்தே என் கலிதீர்க்கும்
கலையமுதே களித்தாடு - கலைக்
கூத்தே என் குலவிளக்கே
குறும்பாக நடைபோடும் (முத்தே.....)

மத்தே என் மரகதமே
மாணிக்கப் பொற்பதமே
சித்தே வடிவான சிங்கார உலகினிலே
சீர்வரிசை சேர்க்க வந்த
சொத்தே என் சொர்க்கமே
சோர்வின்றி எழுந்தாடும் என் (முத்தே....)

## இவர் தந்தை

கோதில் புகழ் செழிக்க தான்நாளும் உதிரத்தை உழைப்பாக்கி - உன்னில்
தாவில் குணம் வளர்க்க தன்மேவும் கோபத்தை இனிவிலக்கி
மாசில் மனம் படைக்க உன்னிலுலவும் பாவங்கள் செகுத்து - உன்
வாழ்க்கைப்
பூவில் மணம் கொடுக்க சதாவுழைக்கும் குணக்கொடியுன் தந்தை

தர்மத்தை காப்பவன் நான் - பிறந்த
தரணியை மதிப்பவன் நான் - சிறந்த
தலைவனை துதிப்பவன் நான் - நல்ல
வீரத்தை விதைப்பவன் நான் - கெட்ட
வீணரை சிதைப்பவன் நான்

அன்பை அணைப்பவன் நான் - நல்ல
பண்பை வளர்ப்பவன் நான் - வாழ்வில்
அறத்தை விளைப்பவன் நான் - இழந்த
மறத்தை மறைப்பவன் நான்

ஒழுக்கத்தில் சிறந்தவன் நான் - நல்ல
பழக்கத்தில் மிகுந்தவன் நான் - உள்ளத்
தூய்மையில் நிறைந்தவன் நான் - பிறர்
வாய்மையில் உறைபவன் நான்

உயர்ந்தோரை மதிப்பவன் நான் - என்றும்
சிறந்ததையே ஏற்பவன் நான் - கொண்ட
கொள்கையில் வாழ்பவன் நான் - வந்த
கொடுமையை அழிப்பவன் நான்

புதுமைகள் செய்பவன் நான் - பசும்
புரட்சிகள் செய்பவன் நான் - எதிர்க்
கிளர்ச்சியை அழிப்பவன் நான் - நாட்டு
வளர்ச்சியை நினைப்பவன் நான்

எளிமையை ஏற்பவன் நான் - உள்ள
மடமையை எரிப்பவன் நான் - நல்ல
மாண்பினை மதிப்பவன் நான் - பிறர்
ஆண்மையை வளர்ப்பவன் நான்

நீதிக்குப் பயந்தவன் நான் - சீரிய
நேர்மையை உயர்த்துவோன் நான் - என்றும்
நினைப்பதைச் செய்பவன் நான் - எங்கும்
நிஜத்தினை உரைப்பவன் நான்

# இதழ் மூடாத முல்லை மலரே

மூடாத முல்லை மலரே
பாடாத கன்னித் தமிழே
பூவாத பிள்ளைத் தளிரே
நாடாதே தீய வழியே

கூடாத நண்பர் சிலரே
நாடாதே அவரை நீயே
தேடாத வைரச் சிலையே
மூடாதே திறமை தனையே (மூடாத....)

வாடாத தமிழின் எழுத்தே
சாடாதே நல்லோர் மனதே - தளம்பி
ஆடாத கற்றோர் உளத்தை
வீடாகக் கொண்டால் சுகமே (மூடாத.....)

கொடுக்காத பொருளை எடுத்தே
சேராதவர்கு ஈவாய் நீயே
சோராத மனதைக் கொண்டே
கூரான அறிவைப் பெற்றே (மூடாத.....)

ஈடாக உனக்கு இங்கே
ஏடேது உலகின் முன்பே
கேடான சொல்லை தவிர்த்தே
நாடாள நவங்கள் பெறும் என் (மூடாத....)

# புது நூற்றாண்டுப் பெண்ணுக்கு

எண்ணுடன் எழுத்தையும்கற்று ஏற்றம் பற்பலபெற்று
மண்ணுடன் காதல் நீ கொண்டு குற்றங் குறைகளைவென்று
பண்புடன் கலையையும்வளர்த்து கூற்றமுன்
சாவித்திரியாய்நின்று - இங்கு
மாண்புடன் தேன்புகழ் கொண்டு ஏற்றமுறு உலகத்தின் முன்பு

ஆணும் பெண்ணும் அனைவரும் சமமேயென்று - உனை
வானும் மண்ணும் வணங்கிட வாழ்வதற்கிங்கு
தானமும் தண்ணமும் இலங்கிட புவியினில் நன்கு
மானமும் ஞானமும் துலங்கிட வாழ்திடு தீயதைக்கொன்று

அச்சத்தை தவிர்த்து கல்வியின் உச்சந்தொட்டு - யாவும்
துச்சமாய் கொண்டு பல்வித வெற்றியைபெற்று
நச்சரித்துக் கொள்ளும் வீணரின் பேதமைகொன்று
அர்ச்சித்துக் கொள்ளு இறைவனே துணைநீயேயென்று

மடம் பெண்ணின் குணமிதைக் கருத்திற்கொண்டு
திடம் கொண்டு உலகினை வெல்வாயின்று
நடம் புரிசிவனே அசைவது நங்கையினாலன்றோ
குடத்துள் விளங்காய் இருந்து வேதனை கொள்ளாதே

அடிமைகள் நீங்களென்று உரைத்திடும் அகிலத்தின் முன்பு
கடியுற வாழ்ந்துவிட்டால் பொறைகொள் மனிதருமுண்டு
நலிவுற்று தாழ்ந்துநின்றால் நிறைவடையும் மனிதனென்ற
கலிகளைப் புரிந்துகொண்டு புறப்படு புதுமைப்
பெண்ணேயின்று

பொறுப்புடன் நீநடந்து சிக்கனமாய் செலவுசெய்து
சுறுசுறுப்புடன் கடமைகளை குறைகளற விரைந்துமுடித்து
விருப்புடன் குடும்பத்தில் அக்கறையுடன் வாழந்துநின்று
இருப்பிடம் மாட்சியுற இக்கணமே எழுந்து நில்லு.

பயிர்ப்பு கொண்ட நங்கையென நின்று
எதிர்த்தவரை கொல்ல வன்மைமனம் கொண்டு

உயிர்ப்புக் கொண்டு மனிதரினம் உயரச் செய்து
மதிப்புக் கொண்டு இங்கே மகிழ்ச்சி கொள்ளு

வேறு

வீதிவழி போகையிலே வீரமது வேண்டுமிங்கே
நீதிநெறி வீழ்கையிலே எடுத்தியம்ப வேண்டுங்கண்ணே
ஆதிவழி மாந்தரல்ல புதுநூற் றாண்டின் கண்ணே
சாதிவெறி மாற்றவல்ல திறமையுள்ள புதுமைப் பெண்ணே

கற்புடை சீதையாய் நடந்திட வேண்டுமிங்கே
ஏற்புடை கோதையாய் கற்றிடு உலகத்தின் முன்னே
ஏற்புடை பாதையில் துணிவுடன் நடந்து சென்று
மூர்க்கத்தை அடக்கிப் பணிவுகொள் பெரியவர் முன்னே

சாத்திர நெறிகற்றால் அகிலமது உன்முன்னே
காத்திரப் பணிசெய்வாய் பயின்ற நெறி வழி நின்றே - குல
கோத்திர நெறி கொன்று பரந்தஇவ் உலகை வென்றேயுன்
ஆத்திரத் தினைக்கொல்வாய் பாரதியின் புதுமைப் பெண்ணே

விண்ணுக்கு சென்றுவிட்ட பெண்ணவளின் துணிவுஇங்கே
மண்ணும் மறக்க மாட்டா மாண்புமிகு உயர்வு - பெண்ணே
மண்ணை மறந்துவிட்ட மாந்தருக்கு குரவளித்து கண்ணே
உன்னை உயர்த்திக் கொள் இவ்வுலக மாந்தரின் முன்னே

இல்லறம் நல்லறமாவது உன்கையிலுள்ளது பெண்ணே
நல்லதால் தீயனவிரட்ட இல்லறஞ் செழித்திடும் கண்ணே
கொண்டவன் சொல்லினை ஏற்று செயற்படு அவர்மேல்
அன்பாலே
பாண்டவர் கொண்டதிரௌபதை போலிரு உலகின்
முன்னாலே

கொண்டவனை மறக்கும் செயல்கொள்ளாய் பெண்ணே
ஆண்டவனை தொழுது செயற்படுவாயவர் முன்னே
வீழ்ந்தவனை தூக்கும் திறமையுண்டு உன்னுள்ளே
மாண்ட பண்பு துளிர்விட உழைத்திடு புதுமைப் பெண்நீயே.

## விடிவு காண்போம்

விண்ணும் மண்ணும் ஒட்டிடினும்
மேகம் நிலவில் முட்டினும்
எண்ணும் எண்ணம் ஒருமைப்பட்டு
அடிமை மோகம் அகற்றிடுவோம்!

எவ்வம் எம்மை வருத்திடினும்
வையம் தீயில் கருகிடினும்
வள்ளுவன் தந்த நூல்கற்று
வானம் போல உயர்ந்திடுவோம்!

அடுத்தவன் எம்மை வீழ்த்திடினும்
எடுத்த செயலை முடிப்பதற்கு
தடுப்பவன் எவனோ அவனைவென்று
கரும வீரனாக விளங்கிடுவோம்!

தமிழன் 'ஒருவன்' செத்திடினும்
தரணி தன்னை ஒடிப்போமென்று
தரணி யெங்கும் முழங்கிநின்று
தக்கோர் வாழ்த்தைப் பெற்றிடுவோம்

ஏதிலார் எம்மை எதிர்த்திடினும்
சாதியால் நாம் குறைந்திடினும்
மாசிலா வாழ்வு வாழ்வதற்கே
வடித்த குறள்நூல் கற்றிடுவோம்!

கம்பர் சீதை செத்திடினும்
இளங்கோ கண்ணகி வெந்திடினும்
இம்பர் வாழ்வில் வெற்றிபெற
மங்கையர் நாங்கள் சேர்ந்திருப்போம்

அழகு ஆண்மை துஞ்சிடினும்
உலகில் பொய்மை மிஞ்சிடினும்
அழகு அறிவை வளர்ப்பதற்கு
அறநூல் பலதும் கற்றிடுவோம்!

மனிதன் இதயம் உலர்ந்திடினும்
புத்தன் வாக்கு பொய்த்திடினும்
புனிதன் ஒருவன் வாழ்வதற்கு
ஒருமையுடன் நாம் கைகொடுப்போம்!

வானம் எம்மை தூற்றிடினும்
ஞாலம் நம்மை போற்றிடினும்
மானம் கொண்டு வாழ்ந்திருந்து
கானம் பாடி மகிழ்ந்திடுவோம்!!

யாக்கை வீரியம் கெட்டிடினும்
யார்தான் வந்து எதிர்த்திடினும்
கொள்கை தன்னை வெல்வதற்கு
நம்பிக்கை கொண்டே உழைத்திடுவோம்!

இறப்பு இன்றே வந்திடினும்
துன்பம் நன்றே வருத்திடினும்
சிறப்பு பெற்று வாழ்வதற்கு
சிறுமைத் தனங்கள் அகற்றிடுவோம்!

பித்தன் என்றே ஆகிடினும்
பிசாசு என்றே ஏசிடினும்
புத்தன் போன்று வாழ்வதற்கு
சத்தான பணிகள் செய்திடுவோம்!

கோள்கள் ஒன்றாய் முட்டிடினும்
வாழ்வை வலியோர் வீழ்த்திடினும்
தூள்கள் துன்பம் வாழ்விற்கு
துணிந்து நாங்கள் குரல்கொடுப்போம்!

மானிடர் வாழ்வு இருண்டிடினும்
வான்மதி கூட தொலைந்திடினும்
மாணவர் என்ற சக்தி கொண்டு
நாளைய உலகை விடியச் செய்வோம்!

# காதலித்துவிடு

ஆழிநீரில் நீராடி வைரம் போல ஒளிவீசி
        வாசமுள்ள கூந்தலினை நீலவானில் நனிசீவி - கயல்
விழியைத் தான்மூடி அகிலம் கொண்ட தேவிக்கு
        நீலமயில் நடமாடி கோலவிழி திறக்க
புட்களும் இசைபாட பூமலர்ந்து மணம்வீசி
        கோசமுள்ள அலைக்கரங்கள் கைதட்டி வரவேற்க
காலையிலேயே மலர்சூடி வருகின்றாள் என்கோதை
        காதலித்து நான்தினமும் கவிபாட

நீலக்கடலும் அவள் கண்டு சிவந்ததேனோ?
        கோதை போல அதுவும் நாணப்பட்டு
நீலவானும் அவள் ஒளிபட்டு சிவந்ததேனோ?
        பாவையவள் கன்னம் போன்று - வெண்ணிலவும்
நீல்வானில் சிக்குப்பட்டு மறைந்ததேனே?
        பாவையின் அழகின்முன் தோற்போமென்று - இப்படி
கோதறக் கவிதை தரும் என் தேவியை
        காதலிக்கிறேன் எம்காதல் வெல்லுமென்று

**வேறு**

தாமரையிலே இருக்கின்ற
        அன்னத்தை போன்று
ஆகாயத்தேவதை யொன்று
        நடப்பதனைக் கண்டு
பாவையிவளைப் பார்த்து
        பருவழகை ரசித்து
நானிவளைப் நோக்குவது
        தெரியாத நாணமிவளுக்கு

**வேறு**

கல்வித்தாய் கவிதந்தாள்
கலை வெள்ளமென புரண்டு ஓட - அவளை
அள்ளி நான் அணைத்திடுவேன்
அகத்தில் இன்பமது புகுந்து விளையாட
கல்விதரும் என்காதலியின்
எவ்வமற்ற எழிலதனை குறைவின்றி
பல்விதமாய் பாடிடுவேன்
அவள் தந்த அழகுநிறை தமிழாலே

**வேறு**

வலையல்கள், கொலுசுகள்
சங்கிலிகள் பூமாலையென
அலங்காரத் தேவதையாய்
இங்கிதமாய் இருக்கிறாள்
பிறை போன்ற நெற்றியிலே
நிலாப் போல் பொட்டுவைத்து
கலை கொண்ட பொருளிலே - காதலி
சிரித்து மனம் மகிழ்கிறாள்

**வேறு**

மனத்திலே மகிழ்ச்சியை நிரப்புகின்ற
அவள்ழகை பாடுதற்கு இங்கு
வனத்திலே மலர்ந்த எழில்மலர்
வனப்புமிகு அருவிபாயும் மலை
மகிழ்ச்சியிலே கைகொட்டிச் சிரிக்கின்ற குழந்தை
எழிச்சிமிகு கலைமிளிரும் கவிதை
புகழ்ச்சிமிகு சீதையவள் அழகு - இவையெல்லாம்
உவமையாகது என்னவளின் அழகினுக்கு

வேறு

வெள்ளை நிறமுட்கள் போன்ற
பற்கள் நகை செய்கின்றன
என்னைக் கொலைசெய்த விழியின்
இமைகளெல்லாம் விலையற்றன
படகு போன்று வளைந்து நிமிர்ந்திருந்த
புருவங்கள் எழிலுற்றன
இலங்குகின்ற இவள் அழகை பார்த்திருந்த
என்னிதழ்கள் கவிதரத்துடிக்கின்றன

இரண்டாக பின்னிக் கட்டியிருந்த
அகில் மணங்கொண்ட கூந்தல்
நன்றாக இடுப்பின் கிழேயது
தவள்கின்ற சேய்போல அசைகிறது
கைகளிலே மின்னுகின்ற நகைகள்
நங்கையின் கையழகால் ஒளியிழக்கின்றன
கைகளிலே வைத்திருந்த வீணையொலி
கலைகளின் மூலமென ஒலிக்கின்றன.

மூடியுள்ள அவள் கண்களை
தேடி நான் பார்க்கையிலே
வானங்கொண்ட வண்ண நிலா
அவள் கண்ணினுள் தெரிகின்றது கல்வித்
தானஞ்செய்ய ஒரு கையிருக்கும்
ஏட்டினை ஏந்தியவளை நோக்குகையிலே
ஞானமிங்கு நன்கே விளைந்து
நங்கை அழகினைப் புகழ்கின்றது

வேறு

எனக்குள் சிரிக்கின்ற மங்கையின்
பற்கள் முத்துப்போல் அழகானவை
அணங்கின் சிவந்த வாயில் இருந்து
மேன்மை வார்த்தைகளே ஊறுகின்றன.
அகில் புகை மணமும் சந்தன மணமும்
வீசுகின்ற கூந்தல் கொண்ட
மயில் போன்ற இந்நங்கையினை இறக்கும்வரை
மனதார காதலிப்பேன் என்னுயிர் நீயென.

வேறு

மலர்களிலிருந்து பிறந்தவள் அவள்
மங்கலந்தர நினைப்பவள்
இதழ்நடுவிலிருந்து ஓரங்களில் நீண்டபின்
மேலெழுந்த இதழால்
அவள்தருகின்ற புன்னகை மனதில்
கீறல்களை ஏற்படுத்த
அவள் தன்னை நினைத்து இருப்பதிலும் - ஓர்
சுகத்தினைக் காணுகின்றேன்.

வேறு

அகிலமது சிறக்க வென்று
அதன்மேற் காதலுற்று - அது
விடியநீ இரக்கங் கொண்டு
எம்மண்மேல் காதலுற்று - காதலியே
அறிவது துளிர்க்க வழிசெய்து
நலிவுறும் மாந்தரிலன்புற்று
அகிலத்துள்ள அடியேனைக் காதலித்து
ஏதமில்லா அறிவுணர்த்து

வேறு

கம்பனும் காதலித்தான் பாவையுன்னை
பாரதியும் காதலித்தான் - உன்மேல்
வள்ளுவனும் விருப்பங் கொண்டான் - மாதே
இளங்கோவும் ஆசையுற்றான்
கண்ணதாசனும் உனைநினைத்து காதலிக்க
எண்ணமெனும்மெழுத்தாணி தீட்டப்பட
மின்னுகின்ற கலைகள் செய்து - அறிவின்
குறையற்றிருந்தனர்

வேறு

நான் காதலித்த தேவியவள்
வெண்முளரி தனிலே வீணைகொண்டு
பண் காதொலிக்க மீட்டினாள்
நான் உயர வேண்டுமென்று
எண் எழுத்தளிக்கும் கோதையுன்னை
என் ஜென்மமெல்லாம் காதலிப்பேன்
தேன் சுவையறிந்து நாடல்போல் - நீ
எனை காதலிப்பாய் அன்புகொண்டு.

வேறு

வெள்ளைக் கலையுடுத்த தாயே
கலையுடன் நற்குரவளிப்பாய் நீயே
உன்னைக் காதலிக்கிறேன் நானே
என்காதலினை அறுத்தெறியாதே நீயே இந்த
மண்ணைக் காதலித்துக்கலை மாதே
கல்வியெவ்வத்தை அறுத்தெறிவாய் புவிமீதே
அலகில் வேதந்தரும் வாணியே
காதலித்துவிடு புவியினை நன்கே

## விரைந்து வருவாயா ?

மக்களின் தலைவியாக பார்புகழ் அரசிபோல
ஒல்லாரின் கூற்றமாக பாரிது ஏற்றமுற
இல்லாரின் உயர்வுக்காக மேகலை போலநீயும்
நல்லாரின் வாழ்வுக்காக நடம்புரி சிவனே போல
கற்புடை கண்ணகியாக திடமிகு கோதையாக
நட்புடை மடந்மையாக கற்றநல் ஞானியாக
நாற்குணக் கன்னியாக கொற்றத்தின் திருமகளாக
ஏற்புடை மாணவியாக வீட்டின்நல் குணமகளாக
குழவிநற் தாயவளாக துணைவனுக்கு அமைவாக
விளங்கிடும் அளவிலா இல்லறத்துன்ப தாங்கியாக
இலங்கிடும் அறிவொளியாக நல்லதற்கு அமைவாக
துலங்கிடும் விவேகியாக வல்லஇறை பக்தையாக
கறையகற்றும் பொறுமையோடு இறைதுதிக்கும் மடந்தையாக-தீமைத்
திரை விலக்கும் பதுமையாக சேமமுறு பாவையாக
விரைவினிலே உலகினது விடிவைக் காண்போமென்று
விரைந்து வருவாயா புதுமைப் பெண்ணாக

## பாதையில் விலகாதே

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் - அதை
எண்ணித் துளியும் கலங்காதே
அத்தனை பேரையும் உயர்த்திடும் - நல்
அறிவினை விட்டு அலையாதே

உண்மையை சொல்லத் தயங்காதே - பிறர்
உழைப்பினில் வாழ்ந்திட விரும்பாதே - கெட்ட
பகைவர்கள் பக்கமே பாராதே - கொண்ட
பாதையில் நின்றும் விலகாதே

பரிவு பண்பு பிணைந்து விட்டால் பாசம் பிறந்திடும்
இரக்கம் இறைமை சேரும் போது பக்தி வளர்ந்திடும்
அன்பு ஆசை இணைந்து விட்டால் இன்பம் நிலைத்திடும்
நாணம் அடக்கம் கலந்து விட்டால் கற்பு நிலைபெறும்
உள்ளம் அமைதி கண்டு விட்டால் உறக்கம் வந்திடும்
எளிமை இரக்கம் இருந்து விட்டால் செல்வம் செழித்திடும்
பொறுமை தூய்மை கண்டு விட்டால் பகைமை கரைந்திடும்
கயமை காழ்ப்பு கரைந்து விட்டால் காதல் பிறந்திடும்
காதல் இன்பம் தேடும் போது உறவு மலர்ந்திடும்
பாசம் கருணை கொள்ளும்போது தாய்மை தளைத்திடும்
ஆசை அடக்கம் சேரும் போது அறிவு துளித்திடும்
காசை வென்று உறங்கும் மனிதன் நடக்கும் பாதையிது

## தாய் உழைக்கின்றாள்

முந்நூறு நாட்சுமந்து தன் சத்துதிர்த்து அகமகிழ்ந்து
கண்ணூறு தான் செகுத்து தன் முத்துதித்து முகமலர்ந்து
நல்லூறு அறிவுபெற்று வாழ இறைதுதித்து தனைமறந்து - தாய்
பலநூறு நோன்பிருந்து உடல் நோவுடன் பெற்றெடுத்தாள் உன்னை

அன்பு எனும் தீபமேற்றி உன்புகழை உலகுணர்த்தி
பண்பு தரும் ஓமமாக்கி நற்குணத்தால் உனைநிமிர்த்தி
மாண்பு மிகு மனிதனாக்கி உனையிங்கே வாழவைக்க - பல
நோன்பு ஆற்றி உன்புகழைக் காணவென்று உழைக்கின்றாள்

வறுமையது கற்பதற்கு என்றுமே தடையல்ல
கருமைமிகு வெற்பிதற்கு கொண்டலது எதிரியல்ல
முதுமையது பயில்வதற்கு சரியான நேரமல்ல - இங்கு
புதுமைகளை செய்வதற்கு நாளை உறுதியல்ல

தருமங்களை செய்வதற்கு பணம் தேவையில்லை - மனித
மிருகங்களை திருத்துவதற்கு ஆயுதம் ஏற்றதல்ல - கடலின்
திரவங்களை நிரப்புவதற்கு தரணியில் தாலமில்லை - நற்
கருமங்களைச் செய்வதற்கு மனமொரு எதிரியல்ல

நாட்டினை பிடிப்பதற்கு யுத்தங்கள் தேவையில்லை
வீட்டிலே விருப்புக்கொண்டால்சச்சரவு அங்குவருவதில்லை - பறவை
கூட்டிலே இருந்துவிட்டால் பிடிப்பதற்கு யாருமில்லை - மாந்தர்
நாட்டிலே உயர்ந்து நின்றால் குறைகள் - ஏதுமில்லை

ஆதிதன்னை நினைப்பதற்கு ஆலயங்கள் தேவையில்லை
நீதி தன்னை நிலைசெய்வதற்கு நீதிமன்றம் தேவையில்லை
சாதி, வெறியை கொலை செய்வதற்கு ஆயுதங்கள் தேவையில்லை
கோதில் ஞானம் விளைப்பதற்கு நீதி நூல்கள் உலகிலுள

மூர்க்கத்தீயை அழிக்கமுன்பு உயர்ச்சியென்றும் எமக்கு இல்லை
சன்மார்க்க வழிநடக்க மனத்தளர்ச்சி தேவையில்லை நன் நெறியில்
தீர்க்கமாக இருக்க இங்கு தாழ்ச்சியென்றும் வருவதில்லை
வேர்க்கவுடல் உழைத்துவைக்க வீழ்ச்சிதரு வறுமை என்றுமில்லை

புத்திதன்னை வளர்ப்பதற்கு கல்வியைவிட மருந்தில்லை
சத்தியத்தை விளைப்பதற்கு நூலைவிட வேறெதுவுமில்லை - மனச்
சுத்திதன்னை உழைப்பதற்கு கத்திகோடரி தேவையில்லை -கற்பதில்நீ
பக்திதன்னை வளர்ப்பதற்கு வித்திடஉனை தவிர வேறுயாருமில்லை

உலகப்பற்றை அழித்துக்கொள்ள மனமோர் தடையல்ல
அறிவுப்பற்றை வளர்ப்பதற்கு சமூகம் இடைஞ்சலில்லை
கலகப்பற்றை ஒழிப்பதற்கு ஐநாசபை தேவையில்லை
அலகில் பற்றை வளர்த்துக்கொண்டால் வாழ்கையது சுவைப்பதில்லை

பக்தியுடன் ஈகைசெய்ய தனமென்பது தேவையில்லை
புத்தியுடன் பகையைவெல்ல நூலறிவு உதவுவதில்லை - உளச்
சுக்தியுடன் வேலைசெய்ய உனக்கொரு துன்பமில்லை சத்தியந்
தவறா வாய்மை சொல்ல வீழ்ச்சியென்பது உனக்கில்லை

பகைமையை அழித்துவிட்டால் எக்குறையும் எமக்கில்லை
மேன்மையினை வளர்த்துக்கொண்டால் எம்மறையும் கற்கத்
தேவையில்லை
மகமையினால் கொடுத்துவர மறையாதவொரு பாவமில்லை - நற்
தகமைகளை கரம் பிடித்துக்கொள்ள புகழுமுலகம் உன்னை
தெய்வமென

முயற்சியுடன் நாம்வாழ தளர்ச்சி தேவையில்லை
அயர்வுடனே நாமிருந்தால் உயர்ச்சி எமக்கில்லை
தயவுகொண்டு மற்ரோருக்குழைக்க பயிற்சி தேவையில்லை
மகிழ்ச்சிகொண்டு நீயிருந்தால் தாழ்ச்சி வருவதில்லை

**வேறு**
பெருமை நிறைந்துவிட ஆணவம் கொள்வது நல்லதல்ல
ஒருமை என்றிட தன்னலம் அழைந்திடும் மெல்லமெல்ல - உலகில்
அருமை குறைந்திட இழிசெயல் மலிந்திடும் இதை தடுக்கவல்ல
திறமை காட்டி வழிகாண்பது உன்தன் கையிலுண்டு.

இன்பமும் செல்வமுமிருப்பது நீமட்டும் அனுபவித்து கொள்ள வல்ல
துன்பமும் எவ்வமும்வருவது வாழ்வை வெறுத்து ஒதுக்கவல்ல
தண்ணமும் தானமும் நிறைந்த வாழ்விலே வேதனை வருவதில்லை
எண்ணமும் மனமும் தூய்மை கொண்டால் உனக்கொரு இன்ன
லில்லை

எழுகின்ற அலையோ விழுந்தபின் கடலையே தேடும் - அதுபோல்
வருகின்ற தோல்வியின் பின்பு நீயும் வெற்றியைத் தேடு
மழைகொள்ளா வெண்மேகம் எப்போதோ கலைந்துதான்
போகும்
நிலைகண்டு செயல்கொள் விரைந்து வருமுனக்கு நற்காலம்

மணங் கொண்ட பூவாடி வீழ்வதைப் போல - பிறர்
தனங் கொண்ட நீயும் விழுந்துதான் போவாய்
தினம் நீகொள் கல்வியது மாளாது என்றென்றும்
வனமது கொண்ட நிழல்போல் மாறாது அது வாழ்வளிக்கும்

எழுகின்ற பரிதிபின் மேற்கில் விழுவதைப் போல - உன்னில்
கொடுக்கின்ற மனத்துடன் இருந்துபார் இன்பங்கள் சேர
எறிகின்ற பொருளென்றும் புவியினில் விழுவதைப் போல - உன்னில்
வருகின்ற உறுதிதான் உயர்த்திடும் இமயத்தைப் போல

**வேறு**

மலையிலே பிறந்த அருவியது கடலைத்தேடும் - உன்
மனதிலே எழுந்த நம்பிக்கை உயர்வைத்தரும்
அதிவிலை கொண்ட பொருளினை மனிதன் நாடான் - உன்னில்
இழிநிலை கண்டதும் அவனுனை வேண்டான்

எரிகின்ற நெருப்பு அனைத்தையும் அழிக்கும் - உன்னில்
எரிகின்ற கோபம் உன்னையும் அழிக்கும்
வருகின்ற வெள்ளம் பெருமரத்தையே விழுத்தும் - உன்னில்
எழுகின்ற உயர்கொள்கை உலகையும் உயர்த்தும்

அழுகின்ற குழந்தை அன்னையை அணைக்கும் - உன்னில்
எழுகின்ற மமதை உன்னையே அணைக்கும்
எரிகின்ற தீபம் அனைத்தையும் துலக்கும் - உன்னில்
மிளிர்கின்ற வேதம் உலகையேயுனக்குணர்த்தும்

மணங்கொண்ட பூவை வண்டுகள் தேடும் - நற்
குணங்கொண்ட சேயை உலகமே நாடும் - உன்மேல்
இனங்கொண்ட கோபம் கலகத்தை தூண்டும் - பிறரில்
தினங்கொண்ட பாசம் சமரசத்தை ஊன்றும்

சுழல்கின்ற பூமி நிற்பதில்லை ஒருபோதும் இலட்சிய
மனிதனென்றும் தரிப்பதில்லை எஞ்ஞான்றும்: உலகில்
தளர்கின்ற மனங்கள் ஜெயித்ததில்லை இவைபோதும்
தன்நிலை கண்டு வாழ்கின்ற மனிதனுக்கு எப்போதும்

## வாழவழி தெரியவில்லை

கள்ளமனம் உள்ளவர்முன் உண்டவிடத்தே தீமை செய்தீயவர்முன்
கொல்லவரும் கூற்றுவன்முன் கொடியநெஞ்ச முள்ள வர்முன்
வல்ல அறம் அழிப்பவர் முன் இல்லார்க்கு இன்னல் செய்பவர்முன்
கள்ளவழிநாடும் கயவர்கள்முன் உள்ளமென்ப தில்லா மனிதர்கள்முன்

செல்ல வழி தெரியவில்லை வல்லயிறை துணையுமில்லை
இல்லத்தில் ஒளியுமில்லை எடுத்துரைக்க துணிவுமில்லை
நல்லவழி காட்டுகின்ற நபியவனைக் காணவில்லை
உள்ளகிலி தீர்க்கவந்த புத்தனவன் புவியிலில்லை
வெல்லவழி காட்டுகின்ற யேசுபிரான் எங்குமில்லை
வல்லூறுகள் வாழுகின்ற இவ்வுலகை திருத்தவல்ல
நல்லமகன் யாரென்று யாருக்கும் தெரியவில்லை
உய்யவழி தெரியாமல் உழல்கின்றேன் உலகிலே.

# அணையாத அன்பு

மண்ணிலே மரங் கொண்ட அன்பும்
பண்ணிலே சுரங் கொண்ட அன்பும்
கண்ணிலே இமை கொண்ட அன்பும்
பெண்ணிலே ஆண் கொண்ட அன்பும்
புண்ணிலே வலி கொண்ட அன்பும் - எம்
மண்ணிலே நீகொண்ட அன்பும் மாறலாம் - மாறாது
உன்னிலே நீ கொண்ட அன்பும்
உன்னிலே உன் தாய் கொண்ட அன்பும்

பூவிலே மணங் கொண்ட அன்பும்
காவிலே நிழல் கொண்ட அன்பும்
தீவிலே கடல் கொண்ட அன்பும்
பாவிலே இசை கொண்ட அன்பும்
நாவிலே சொல் கொண்ட அன்பும்
கோவிலே குடி கொண்ட அன்பும் மாறலாம் - மாறாது
சாவிலே உயிர் கொண்ட அன்பும்
சேயிலே தாய் கொண்ட அன்பும்

மடையிலே அணை கொண்ட அன்பும் (நன்)
நடையிலே நீ கொண்ட அன்பும்
கோடையிலே வெயில் கொண்ட அன்பும்
விடையிலே வினாக் கொண்ட அன்பும்
தொடையிலே மறங் கொண்ட அன்பும்
உடையிலே உடல் கொண்ட அன்பும் மாறலாம் - மாறாது
கொடையிலே வள்ளல் கொண்ட அன்பும் - எம்மில்
சடையுடை பிரான் கொண்ட அன்பும்

அலையிலே கடல் கொண்ட அன்பும்
மலையிலே நீர் கொண்ட அன்பும்
தலையிலே முடி கொண்ட அன்பும்
இலையிலே நிறங் கொண்ட அன்பும்
விலையிலே பொருள் கொண்ட அன்பும்
மலையிலே எழில் கொண்ட அன்பும் மாறலாம் - மாறாது
சிலையிலே கலை கொண்ட அன்பும்
கவியிலே கவிஞ்ஞன் கொண்ட அன்பும்

தேனிலே சுவை கொண்ட அன்பும்
உன்னிலே பிறர் கொண்ட அன்பும்
ஊனிலே உயிர் கொண்ட அன்பும்
மீனிலே நீர் கொண்ட அன்பும்
வானிலே மதி கொண்ட அன்பும் - வடி
காலிலே நீர் கொண்ட அன்பும் மாறலாம் - மாறாது
ஆனிலே கன்று கொண்ட அன்பும்
பதியிலே தாரம் கொண்ட அன்பும்

வேரிலே மண் கொண்ட அன்பும்
பலரிலே நீ கொண்ட அன்பும்
தேரிலே பரி கொண்ட அன்பும் நம்
ஊரிலே நாம் கொண்ட அன்பும்
ஏரிலே வயல் கொண்ட அன்பும்
போரிலே படை கொண்ட அன்பும் மாறலாம் - மாறாது
நீரிலே நிலம் கொண்ட அன்பும்
தந்தையில் மகன் கொண்ட அன்பும்

பிணத்திலே புழுக் கொண்ட அன்பும்
மனத்திலே மறங்கொண்ட அன்பும்
இனத்திலே நீ கொண்ட அன்பும்
வனத்திலே மரங் கொண்ட அன்பும் - நற்
குணத்திலே நீ கொண்ட அன்பும்
தனத்திலே மாந்தர் கொண்ட அன்பும்
குளத்திலே நீர் கொண்ட அன்பும் மாறலாம் - மாறாது
சீடனிலே குரு கொண்ட அன்பும்.

## மாறுவாயா?

பாவலனாய் நல்லதோர் கோமகனாய் அறிவூட்டும்
ஆசானாய் - நாட்டின்
காவலனாய் நலன்செய் சூரியனாய் மருந்தூட்டும்
வைத்தியனாய் - நல்ல
சாதகனாய் நல்ல சொல் நாவலனாய் தெளிவூட்டும்
போதகனாய் கீதை சொன்ன
மாதவனாய் இலம்கொல் புரவலனாய் அழுதூட்டி
உயர்ந்தவனாய் மாறுவாயா?

## சேவை செய் பெற்றோருக்கு

கடிபெற்று உன் குடியோங்க அதுகண்டு உன் பெற்றோர்
வலி நீங்க
மடியற்று தன் கவியோங்க இதுகண்டு உனை கற்றோர்
தினம் வேண்ட
இடிவுற்ற பிறரை விடிவாக்க உனைஈன்று உனை
பொலிவாக்கிய குரவர்கள்
அடியற்ற மரம்போல இழிவுற்று முதுமைகண்டு இன்று
நலிவுறுமவர்க்கு நற்சேவை செய்

# தேடும் தேசம்

மிகைமை துளிர்விடும் மனதைக் கொண்டு
தீயதை எரித்திட துணிவு கொண்டு
மேன்மைக்கே வழிதரும் எண்ணங் கொண்டு
தாழ்மையை அகற்றிட கல்வி கற்று - நற்
தகமைகள் காட்டி தங்குருவினை மதிப்பு செய்யும்
குணமிகு மாணவனை குவலயத்தில் தேடுகின்றேன்

உன்னத உத்தம புதல்வனைப் பெற்று
உலகிலே புகழ்பெற வேண்டு மென்று
தன்னலங் கருதா அன்பினை தந்து
தன்மகன் சிறப்புற வேண்டுமேயென்று
தன்னையே மறக்கும் தாயினை நினைக்கும்
தனயனை நான்தினம் தரணியில் தேடுகின்றேன்.

கண்களாய் என்னுடன் இருந்து கொண்டு
களங்கம் வருகையில் நானமைதி கொள்ள
அண்ணனாய் ஆசானாய் நல்லறிவு தந்து - நான்
அவனியில் உயர்ந்து புகழடைந்து கொள்ள
தூண்களாய் துன்பத்தில் பங்கெடுக்க வல்ல
தூயநல் நண்பனை நானிங்கு தேடுகின்றேன்.

உள்ளத் திருக்கும் உண்மை சொல்லி
தன்னலம் கருதா சேவைகள் செய்து
நல்ல மனதுடன் நற்தன்மை கொண்டு
குள்ளமனம் உள்ளோரை திருத்தி நின்று என்றும்
உள்ள இறைவனில் மாறா அன்பு கொண்ட
பக்தனை தரணியில் பகலிரவாய் தேடுகின்றேன்.

ஒருவனே இறைவனென உணர்த்தி நின்று
உன்னதவழியினை காட்டி நின்று கொண்டு - நாளை
மனிதனே இறையென மாறும் வண்ணம்

மறையினை மனதினில் மனமிருத்தச் செய்து
புனிதமான பூவுலகை படைக்க வல்ல
மதகுரு எவரென மண்ணில் தேடுகின்றேன்.

மக்களுக் கிருக்கின்ற குறைகளைக் கொன்று - நம்
மண்ணிது செழிக்க நல்மனம் கொண்டு
எக்காள மிடுகின்ற எதிரியைக் கொன்று
எம்மினம் செழிக்க சிந்தனை செய்து
மக்களுக் காகவே என்றென்றும் உழைக்கும்
அரசியல் தலைவனை அவனியில் தேடுகின்றேன்.

தன்னினம் கொள்ளும் துன்பத்தைக் கண்டு
அன்னியன் எவனோ அவனைக் கொல்ல
வெஞ்சினம் கொள்ளும் வேங்கையைப் போன்று
கையை உயர்த்தி உலகினை வென்று
தன்னினம் நிலைக்க தாட்சண்ணியம் செய்யும்
தமிழனை தரணியில் தங்காது தேடுகின்றேன்.

மண்ணை விரும்பும் பேதமை கொன்று
பெண்மையை மதிக்க போதனை செய்து
தன்கை அரும்பும் வியர்வையைக் கொண்டு
பிறர்படும் துயரினை தீர்த்து நின்று
தென்னை போலிங்கு தெய்வமாய் வாழும்
மனிதனை மண்கொண்ட புவியிதில் தேடுகின்றேன்.

## தனியுலகு படைப்போம்

பொன்னும் மணியும் புனைதுகில் வகையும்
எண்ணில் எவரும் நயம்பெறு தொழிலும்
மின்னும் குறுநகையும் எழில்சோலை அழகும்
மன்னும் நீதியும் மலர்ந்திடப் பெற்று
எண்ணும் மனதிலெல்லாம் மாட்சிமை ஓங்கிட
என்றும் போற்றத்தக்க தனியுலகு படைப்போம்.

## இதுவெல்லாம் இங்கு ஏனோ

வாய்மைகள் கெட்டு இங்கே
வாழ்முறை கெட்டதேனோ?
தூய்மைகள் தொலைந் திங்கே
துயர்மிகக் கொண்டதேனோ?
ஆய்பொருள் அறிந்த பின்பும்
அவ்வழி நாடலாமோ?
மெய்ப்பொருள் துணிந்த பின்பும்
பொய்ப்பொருள் தேடலாமோ?

பாசங்கள் கெட்டு இங்கே
துன்பங்கள் வருவதேனோ?
மோசங்கள் மொட்டு விட்டே
மண்ணினில் மலர்வதேனோ?
நாசங்கள் வெற்றி கொண்டே
இன்பத்தைக் கெடுப்பதேனோ?
ஆசைகள் மடை திறந்தால்
அகிலத்தில் அமைதி வருமோ?

நேர்மையின் மொட்டு இங்கே
வாடித்தான் வீழ்வதேனோ?
ஆண்மையின் சிங்க மிங்கே
அடங்கியே போகலாமோ?
தூய்மையால் மேன்மை கொண்டே
துயர் அற வாழலாமே?
பான்மைகள் கொண்டு இங்கே
பாங்குடன் வாழ்வதெப்போ?

## புகழ் நாட்டு

அழுதூட்டி அறிவூட்டி தெளிவூட்டி நன்னிலையூட்டி - தம்
நிலைகாட்டி பிழைகாட்டிக் நெறியூட்டி நல்வழி காட்டி - அறிவுத்
திறனூட்டும் பொருட்டெமை தரமாக்க உதிரத்தை உழைப்பாக்கும்
தந்தைக்கு
இதமூட்டி மனக்களிப்பூட்டி மண்ணில் உன்புகழ் நாட்டு.

## உனக்கேது துன்பம்

நீர் வருமுன் நாற்று முளைக்காது
சுதி சேரமுன் பாட்டு இனிக்காது
நிதி தரமுன் நியாயம் கிடைக்காது - எல்லாம்
விதி தருமெனில் உபயம் உனக்கேது?

பாதிக் குரவுன் அறிவை வளர்க்காது - ஏழை
ஓதுங் குரல் சபையில் ஒருபோதுமேறாது
சாதி மதம் களைய போரால்முடியாது
கோதில் உளம் இருந்தால் தோல்வியுனக்கேது?

காந்தி மீண்டும் வருமுன் சாந்திகிடைக்காது - அக
ராதி வருமுன் மொழியின் அர்த்தம்புரியாது
தேதி வருமுன் மரணம் நெருங்காது - ஆனால்
கீர்த்தி யுடன் நீ வாழ்ந்தால் கேடுஉனக்கேது?

வாதி வருமுன் வழக்குத் தொடங்காது
ஆதி அவன்முன் பிழைக்கு இடமேது
மோதிப் பகைத்தால் அமைதி வராது - நூல்
ஓதித் துணிந்தால் ஒருதுன்பம் உனக்கேது?

## அன்புச் சேவை

இருமுது குரவருக்கும் பதிநிலை சேவை செய்து
மெலிவுறும் கால்கள்தொட்டு வெளுநிலை கூந்தல் மட்டும்
நலிவுறும் இறைகளென முதுநிலைச் சேவை செய்தல்
இழிவுறும் தனயன்தன்னை உயர்த்திடும் அன்புச் சேவை

# அகரம் முதல் ஔகரம் வரை
# அறநெறிகள்

அன்பும் அழகும் அறிவும் நிறைந்து
பண்பாய் பழகும் முறையை பயின்று
அன்பால் உலவும் நெறியை உணர்ந்து
உன்னால் உலகம் உய்ய வழிசெய்!

ஆத்திரம் ஆணவம் அனைத்தையும் அடக்கி
சாத்திரம் நற்றவம் யாவையும் விளங்கி
காத்திரம் மிக்கதோர் பாரை நீ படைக்க
தோத்திரம் செய்தே அறப்போரைநீ தொடங்கு!

இன்பமும் துன்பமும் எதையுமே தாங்கி - உன்னில்
அற்பமும் வன்பினை சிதைவுற ஓட்டி
குற்றமும் குறையையும் கொலையுறத் தாக்கி
கொற்றமும் புகழ்வுறும் நிலையினை உருவாக்கு!

ஈகையும் இரக்கமும் உன்னிலே படைத்து
யாரையும் இகழ்வுறும் துர்வினை செகுத்து
கோதையால் புகழ்வுறும் வெற்றினை படைத்து
பாரையே வளஞ்செய்யும் நற்சுனை போலாகு!

உள்ளத் தூய்மையை உரையினில் பகர்ந்து - உனக்
குள்ள தாய்மையை உலகினில் புகழ்ந்து
கள்ளப் போர்வையை இன்றேநீ களைந்து - உலகை
நல்ல பார்வையால் வென்றுநீ விளங்கு!

ஊரையும் உன்தாயையும் இருகண்களாய் நினைத்து
ஏரையும் எழுதுகோலையும் உன்கையிலே பிடித்து
பாரையே விலைகூறும் மாந்தரை ஒழித்து - தீயர்
யாரையும் எதிர்கொள்ளஎழுந்துவா சிங்கமாய்!

**எ**ண்ணையும் எழுத்தையும் கண்களாய் மதித்து
பண்பையும் உழவையும் மண்ணிலே வளர்த்து
விண்ணையும் விழுதையும் விரும்பியே தொடுக்க
விண்புகும் கலையிங்கு அரும்பிட வழிசெய்!

**ஏ**தமொன்றிலா மனிதன் ஒருவனாய் வளர்ந்து
தீதுமொன்றிலா புனிதன் ஒருவனை வளர்த்து - கலைக்
கோலமொன்றினை மாந்தர் தன்னிலே பதித்து - நல்
ஞாலமொன்றினை காண விரைந்துவா எழுந்து!

**ஒ**லிக்கும் வார்த்தைகள் உண்மையாய் துலங்கி
தவிக்கும் மாந்தரின் ஏழ்மையை விலக்கி - நீ
சலிக்கும் உள்ளங்கள் மேன்மையுடன் வாழ்ந்திட
செபிக்கும் அவ்வுள்ளங்கள் நீமேன்மையுற்று வாழ!

**ஓ**தித்துதித்து ஆதியினை நினைத்துக் கொண்டு
சாதிதவிர்த்து ஆதியொன்று என்றிங்கு கொண்டு - தீய
வேதியனையுதிர்த்தி நீதியினை கரங்களிற் கொண்டு
மேதினியையுயர்த்து நாதியற்ற மனிதரினம் செழிக்க!

**ஔ**வியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவென்று
ஔவையார் மொழிந்தார் ஊக்கத்திற்கு தானேயிங்கு - பிறரை
பல் விதமாய் புறம்பேசல் மனிதனுக்கு இழிவென்று - நீ
நல்விதமே நடந்து பிறர்தமக்கு உதவல் நன்று!

எஃகரிவாள் கொண்டு எதிரியைக் கொன்று
அஃகாவறிவு கொண்டு அணிகலனதைப் பூண்டு
நல்லதெளிவு கொண்டு தரணியிதில் வாழ
வல்லதுணிவு கொண்டு எழுந்துவா கோளரியாக!

**க**ற்றநல் மங்கையென்று உற்றார் புகழ்செய்ய
உற்றனள் உலகிலென்று உலகமே போற்றிநிற்க
அற்புதம் செய்யுமிந்த அணங்கு யாரோவென்ன
வெற்றியின் பாதைநோக்கி விரைந்துவா வேங்கை போல!

ஙவின் சிறந்த நற்சொல் தழுவினின்று
நாவில் சிறந்த நற்கலை எழுதிநின்று
ஆவின் சிறந்த நற்பாலைப் போலஇங்கு - உழை
பாரில் மறைந்த சற்குணம் பெருகவென்று!

சன்மார்க்க வழிநின்று இல்லார்க்கு உதவிசெய்து
துன்மார்க்கப் பழிகொன்று கல்லாரை இனங்கண்டு
எம்மார்க்க வழியெனினும் ஆண்டவன் ஒருவனென்று - அவனை
பல்மார்க்க நெறிபயில்வித்து சன்மார்க்க அறிஞனாக்கு!

ஞயம் நிறை தன்மையை நடத்தையில் காட்டிநின்று
பயம், குறை பொய்மையை துரத்தியே ஓட்டிவென்று
ஜயம், மறை மெய்மையை உதிரத்தில் கூட்டியிங்கு - பங்
கயம் நிறை பொய்கையாய் உலகினை மாற்றிநில்லு!

டமாரம் மேளமாய் ஒலிக்குமென் கீதமென்று - எமக்கு
இடர்வரும் போதிலெமை பழிக்குமிவ் புவியைக்கண்டு
தளர்வுறும் போதிலே கதியெமக்கு புத்தனின் போதமென்றால் - அப்போது
துளிர்விடும் மனதிலே வாழ்க்கையெனும் வேதம் நன்கு.

ணம்பி நடவென்று எழுதுவது முறையேயென்று
தன்பிழை கண்டுஅதை திருத்தாத தமிழனிங்கு
தன்னுடைய உயிரைவிற்று பிறருயிர் கேட்குமுடனென்றுவிலகி
பண்புடைய பயிராய்வளர்ந்து உன்புகழை உலகுணர்த்து!

தந்தை தாய் குருவின் மதிப்பினைக் காக்கவென்று
எந்தன் தாய் அருமருந்தாய் கல்வியினை ஊட்டிநிற்க
பந்தை சேய் விருப்புடன் எடுப்பதனைப் போல நீயும்
உந்தன் புகழ் பரப்பி எடுப்புடன் உயர்ந்து நிற்க!

நல்லதே நினைத்து நல்லதே செய்துநின்று
மன்பதை வெறுத்து களவதை செகுத்து நின்று
உள்ளதை உண்டிங்கு இல்லாததை மறந்து விட்டு
உள்ளபடி வாழ்ந்தால் உனக்கேது குறையுலகில்

படிப்பில் சிறந்து பரிசுகள் பெற்றுகொண்டு
நடிப்பில் உயர்ந்து விருதுகள் பெற்றிங்கே - புகழ்மிகு
குடியில் பிறந்து உயர்ந்தாலும்குடியினைதொட
மடியில் கிடந்து வாடும் குடும்பம் துன்பங்கொண்டு

மணிமொழி பகர்ந்து மக்களைக் கவர்ந்துநின்று
தமிழ்மொழி முகர்ந்து பல்கலை புகன்றுநன்கே
அருண்மொழிக் கோவாய் நன்நிலை பெறினுமிங்கே
அகந்தை நீ கொண்டால் அழிவுதான் அன்றுதொட்டே

யதார்த்தவுலகை புரிந்து எடுத்தகாரியத்தை முடிப்பதென்று
குதர்க்கவுலகை விடுத்து தர்மச்செயலில் இறங்கிநின்று
சாதிக்கவுளதை சாதித்து கொடுத்தவாக்கை காத்துநின்று - பகவான்
போதித்தகீதையை படித்து பகைவரையெதிர்க்க எழுந்து நில்லு!

ரணவெறியை ஒழித்து அல்லலுறுவோரை நினைத்துக்கொண்டு
பணவெறியை அறுத்து ஒல்லார்களை தொலைத்துநின்று
குணவெறியை வளர்த்து எவ்வமுறுவோரை உயர்த்திவைத்து
இனமுறிவை களைய கடிந்துமுழங்கு இடியென!

லத்தீன்தமிழுள் சேர்ந்து சிறத்தலடைந்தது போலஇங்கு
வித்தின்வளர்வால் யார்க்கும் நிழலளிக்கும்மரம் போலநின்று
முத்தின்தழுவலினால் சேர்ந்த சிப்பிசிறந்தது போல - நன்கு
கற்றோரைத்தழுவ சேர்ந்த துர்க்குணம்மறையும் அகத்திநின்று

வல்ல இறைவனுக்கும் வணமதகுருவுக்கு மிங்கே
நல்ல கலைஞருக்கும் தலவிருட்சத்திற்கும் இங்கு - பதவியில்
உள்ள தலைவருக்கும் உன் நாற்குரவருக்கும் நன்றே கள்ள
மில்லா பெரியார்க்கும் வந்தனம் செய்துகொள் கரத்திணைக் கொண்டு!

ழகர லகரம் பிழையுற எழுதுகின்ற தமிழனிங்கு - தமிழ்
நகர வளம் பொலிவுற வழுவிதனை நீக்கியிங்கு - தமிழை
முகர மனம் ஒளிபெற்று அழகுக்கவி ஆக்கிநின்று - இமய
சிகர மதுவே தமிழ் என்று அலகில்புகழ் புனைந்து கொள்ளு!

**ள**கர லகரம் மாறிவிட தமிழ் மாளுமிங்கு
உலக மாந்தர் கூறுபட புகழ் தேயுமிங்கு
உலக கலகம் தீர்ந்து விட அன்புவெள்ளம் பாயுமிங்கு
அளவில்கலைகள் தோன்றிவிட அறிவினெவ்வம் தீரும் நன்கு.

**ற**ப்பர் வளர்வது புவியில் நமக்காகத்தானிங்கு
கம்பர் வளர்த்தது புனித தமிழ்கதைதான்
தெவ்வர் இருப்பது எம்மை வீழ்த்திடத்தானிங்கு
இம்பர் வாழ்விதை உணர்ந்து செயற்படு நீயிங்கு!

**ன**கரம் ஒலிப்பது நுனி நாக்கினின்று
வைரம் கிடைப்பது அடிக் கிடங்கினின்று
ஊனம் என்பது அகந் தன்னிலுண்டு
நகரம் செழிப்பது எம் கையிலுண்டு.

## தேடல்கள்

விரல்களின் தேடல் வீணைநாதந் தரும் வரைக்கும்
தானை கொண்ட தேடல் பகைவர்கள் ஒழியுமட்டும்
பேனையின் தேடல் எம்மையே உயர்த்தி நிற்கும்
அணையாது ஒளிரும் தேடல் கல்விதான் இறுதிவரைக்கும்.

தமிழின் தேடல் நற்கவிதை தரும் - நீர்க்
குமிழியின் தேடல் அதுஉடையும் மட்டும்
கண்விழி கொண்ட தேடல் ஒளியுள்ள வரைக்கும்
நல்லறிவு கொள் தேடல் ஏழ்ஜென்மம் மட்டும்.

மண்ணில் தேட என்றோ வைரம் கிடைக்கும்
பண்கொண்ட தேடல் நற்சுகமளிக்கும்
தன்னுள்ளே தான்தேடுதல் நல்ல உயர்வளிக்கும் - அது
மண்ணினில் நம்வாழ்வு முடியுமட்டும்.

# பதிலுரைப்பாய் தோழனே

வீதிவழி போகையிலும் - கல்வி
ஓதவந்த வகுப்பினிலும்
நாதியற்ற மாணவன் போன்று
நண்பியிடம் நடப்பதேனோ?

ஓதித்துணிந்த படியிருந்து - ஆண், பெண்
சாதியொன்றே என்றெண்ணாமல்
பீதி தரும் கேடியைப் போன்று
கோதையிடம் கேலி கொள்வதேனோ?

பெற்று உனை புவிசேர்த்தவளைப்போல்
உற்ற வுன்சோதரிபோல்
மற்ற வளை நினைக்காமல்
கற்ற கல்வியை கரைப்பதேனோ?

பகிடிவதை என்று இங்கு
மகிடியதால் மயங்கிய அரவமென
கூடியுள்ள நண்பனோடு தானும்
வழிதவறி பழி கொள்வதேனோ?

பிரத்தியேக வகுப்புக்களில்
வனிதையவள் பின்னிருந்து - படிப்பில்
கிரந்தையற்று குரங்கு போன்று
கிறுக்குத் தனம் செய்வதேனோ?

கண்டுகேட்டுச் சொல்லியுள்ளேன்
கவிதைக் குள்ளிருந்து நீயும்
நன்னடத்தை கொள்வதெப்போ - நான்
கேட்கின்றேன் பதிலுரைப்பாய் தோழனே

ஒழுக்கங் கொண்டு பிறர்போற்ற வாழ்ந்து
அழுக்ககன்ற நல்வாழ்வு கொண்டு - நற்
பழக்கத்தில் என்றும் கறையகல நின்று
உள்ளன்பால் தன்னினம் வாழ
கலக்கஞ் சோர்வு இலம்பாடு அகற்றி
பணிவுடன் நாணலைப்போலநீ வாழ்ந்து
உழைத்திடு உன்நாடு என்றுமே சிறக்க
உன்வீரத்தை செயலிலே காட்டி!

வங்கத்தின் அலையென எழுந்துநீ சீறு
துன்பத்தை நொடியினில் தூள்தூளாக்கு
சிங்கத்தை நடுங்கிடச் செய்யுமுன் வீரத்தால்
தங்கிடும் தீயரை தீக்கிரையாக்கு
தூக்கத்தில் கண்டகனா நனவாகிச் செழிக்க
துயர்கொள் உலகம் இன்பத்தால்விழிக்க
அங்கத்தில் தலையென ஆகிச் சிறந்து
அகிலத்தை அரசாள்வாய் அன்பினைக்கொண்டு!

உள்ளம் என்பது பொய்யாது நின்று
உயர்நிலையை உழைத்துநீ வென்று
வெள்ளம் என்ன அன்புளம் கொண்டு
ஊருக்காய் உன்னுணர்ச்சியைக் கொன்று
எவ்வத்தால் என்றென்றும் தளர்வோர் தமக்கு
ஐயமற அறிவூட்டி நின்று
வார்த்தையில் வெறும் சொற்கட்டு அற்று - புகழால்
அள்ள முடியாத ஆழிபோலாகு!

வைதோரின் வாழ்த்துக்கள் பெற்று எதற்கும்
வாலாட்டும் நாய்கள் விட்டு
நைவாரின் வாழ்வுக்கு ஒளியென நின்று
நம்நாட்டை எழில்பெறச் செய்து
மை வாங்கும் விழிமாதை மாதா வென்று - தமிழ்ப்
பண்பாட்டை செழிப்புறச் செய்து - எமைக்
கொய்வார்க்கும் நல்லதே செய்து இந்த
குவல யத்தை நல்வழி நடத்து!

செகங்கண்டு செய்யாமல் ஒறுத்து உந்தன்
அகந்தன்னை எந்நாளும் கழுவிப் பிள்ளை
அகம் போன்று நற்செயல் தழுவி நின்று
அல்வழிதன்னை என்றும் வெறுத்து - உந்தன்
முகங் கண்டு இரப்பவர் தமக்கும் நல்ல
இடந்தந்து இம்சைகள் களைந்து விட்டால்
யுகந்தோறும் உன்புகழ் வாழும் - இது
பிள்ளைக்கு அன்னைதரும் வீரத் தாலாட்டு!

கவிஞரின் பாடலெல்லாம் கற்பனை தேயும் வரைக்கும்
வலைஞனின் கூவலெல்லாம் விற்பனை முடியும் வரைக்கும்
இளைஞனின் அழகுஎல்லாம் முதுமையின் வருகை வரைக்கும்
அறிஞரின் புகழ்எல்லாம் அற்பரை சேரும் வரைக்கும்

மூடரின் நாடலெல்லாம் பேதமை ஒழியும் வரைக்கும்
வேடரின் தேடலெல்லாம் பசியினை போக்கும் வரைக்கும்
தூயவர் செயல்களெல்லாம் துய்யவன் வழி இருக்கும்
மனிதனின் துன்பமெல்லாம் மனநிறைவு கொள்ளும் வரைக்கும்

மனைவியின் பாசமெல்லாம் உழைத்துக் கொடுக்கும் வரைக்கும்
துணைக்கென்ற பிள்ளையெல்லாம் பணத்தினை எடுக்கும் வரைக்கும்
அனைவரின் உறவுஎல்லாம் உள்ளவை தீரும் வரைக்கும்
அணையாத ஜோதியப்பா அன்னையின் அன்பு மட்டும்

காதலுற்று தேடலெல்லாம் கட்டையில் போகும் வரைக்கும்
மாதரின் பாடலெல்லாம் மழலையின் தூக்கம் வரைக்கும்
சோதரர் சுற்றமெல்லாம் சொத்துக்கள் மறையும் வரைக்கும்
சேர்ந்தவுன் கல்விமட்டும் செத்திடாதுஏழு ஜென்மம் மட்டும்

பொருள்தரு இன்பமெல்லாம் தொடர்ந்தாலே உறவு இருக்கும்
அருளூறு உள்ளமெல்லாம் இடரிலாநல் எண்ணம் இருக்கும்
தளர்கின்ற நிலையிலேயே இறைவனின் நினைப்பு இருக்கும்
இத்தகைய ஆட்டமெல்லாம் இறைவிடும் அழைப்பு வரைக்கும் தொடரும்

## புறப்படு புகழு டைய மனிதனாக

திசையெல்லாம் ஈனங் கொண்டே
இருக்கின்ற மனிதர் தம்மில்
வசையெல்லாம் அகற்றிக் கொண்ட
வான்விடி வெள்ளி யன்ன
குறைவின்றி உதித்து இங்கே
வசையறு தொண்டு செய்தால்
இசைவுற வணங்கி உன்னை
உயர்த்திடும் உலகமெல்லாம்

கண்களிற் குரோதம் கொண்டே
மண்ணின்மேல் வாழ்வோர் தம்மை
பண்பெல்லாம் உணரச் செய்தே
அன்பாளன் ஆக்கி இங்கே
அன்பினால் அனைத்தும் வெல்லும்
அகிலத்தை நீயிங்கே சமைத்து
என்பினால் இணைந்தவுன் யாக்கை
எரியுமுன் உலகு சேர்இன்பமெல்லாம்

வாழ்விலே தாழ்வு கொண்டே
வீழ்ந்த எம்சமூகந் தன்னை
நாவிலே நற்சொல் கொண்டு
நாற்புற நாட்டை வென்று
வீழ்ந்து இங்கிருப்போரின் துன்ப
ஊழ்வினை தீர்த்து விட்டால்
ஏத்துவர் உலகில் மாந்தர் உன்னை
எந்நாளும் நீயிங்கு நலம்காண்பாயென்று

களைத்து தாம்மருட்சி கொண்டு
இழைத்திட்ட உலகம் தன்னை
விளைந்தநல் அறிவு கொண்டு
தளர்ந்திட்ட கொள்கை கொன்று
பிழைத்ததீ வழி செல்வோர்க்கு
பிழைத்திட வழியைக் காட்டின்
தளைந்திடும் உலகில் அன்பு
பண்பு எனும் அறங்களெல்லாம்

வீழ்த்துமுன் எதிரியை தெரிந்தும்
வீறுடன் எழாத கோழைதன்னை
ஏத்துமுன் திறமை கொண்டு
எதிர்க்க வல்ல புலிகளாக்கி - துன்பத்தில்
ஆழ்த்துவோரை அழிக்க வல்ல
போற்றுகின்ற மறமுடையோனாக்கின்
வாழ்த்துவர் உலகிலுள்ள மாந்தரெல்லாம்
வாழ்கநீ பல்லாண்டு என்று

தோன்றிவளர் புத்துலகில் இன்றும்
புரிந்துணர்வே இல்லாமல் பிறருழைப்பில்
ஊன்றி வளரும் புகழில்லாரை
உலகிற்கு என்றும் பயனில்லாரை
சாந்தியுடை நன்மகன் எங்கள்
காந்தி வழிநின்று திருத்திக்கொண்டால்
குன்றிய அறங்கள் எல்லாம்
குவலயத்தில் ஓங்கி வளரும்

சாதிவெறிதன்னால் சண்டை செய்து
சாக்கடையில் வாழும் மனிதன்தன்னை
ஆதிவெறிதன்னால் போதை கொண்டு - என்
தேவனே சிறந்ததெனும் மூடன் தன்னை
நீதிவழிதன்னில்நீ இருந்து கொண்டு
நிலவுலகம் புகழ அவரை ஆக்கிவிட்டால்
தாவில் புகழாளன் நீயே என்று
தரணியே வணங்கும் உன்னைக்கண்டு

நீக்காமல் பழமைதன்னை ஏற்றுக்கொண்டு
நிலவுலகம் தூற்றவாழ் மனிதன்தன்னை
தாக்காமல் தயவுதன்னை அவனிற்கொண்டு
தன்மையுற யாவையும் எடுத்துச் சொல்லி - புது
ஆக்கமின்றி இருக்குமிந்த இலங்கைமண்ணை
ஆண்மையுள்ள ஒன்றாக ஆக்கிவிட்டால்
புத்தூக்கமுள்ள இயந்திரங்கள் வந்துநின்று
புதுவுலகை காணவொரு வழிசமைக்கும்

தீந்தமிழிருக்க வன்தமிழ் உமிழும்
        தீயோரை திருத்த வென்று - அவர்
கற்றுத் தழைத்தோங்க கலைகள் தனை
        கற்பித்து துர்குண துர்வார்த்தையழித்து
சாந்தமுடை சற்குணவாலய புனிதனாய்
        அவனைநீ ஆக்கி விட்டால்
தமிழன்னை என்றென்றும் தரணியிலே
        தண்ணமுடன் இருந்து சிரித்திருப்பாள்

மானத்தமிழன் மமதை கொண்டு
        ஈனமுற்று நிலைகெட்டு வாழ்வோர்தன்னை - உன்
ஞானம்தனைக் கொண்டு தமிழரெல்லாம்
        வானம்தனையும் வெல்வர் என்றுரைத்து
ஞாலமிதில் மாட்சி கொண்டுவாழ
        ஞயம்நிறை செய்கை செய்துவிட்டால் - தமிழ்த்
தாலந்தனை தீர்க்கும் தமிழன்னை
        ஞாலத்தில் இருப்பாள் என்றென்றும்

வீறுடன் விளங்கும் வீரங்கெட்டு
        சோர்வுடன் இருக்கும் மாந்தர்தன்னை
ஏறுபோல் ஏற்றிவை உன்கரங்கொண்டு
        வேருடன் சோர்வினை விலக்கிவைத்து
கூறுபோட்டு நிலைகுலைய செய்வோர் தன்னை
        வேருடன் அறுத்தெறியும் உறுதிவந்தால்
நூறு பேர்எமை குறிவைப்பினும் பயனில்லை - உனக்கு
        மலர்மாலையென அவர்அம்பு கழுத்தில் விழும்

வம்புகள் செய்து வாசனையற்று
        தன்புகழறியாமல் தரணியில் கெட்டு
அம்புபோல் சொற்களால் வேதனைதந்து
        அன்புளமின்றி அலையும் அனைவருக்கும்
தென்புசால் அறிவுஊட்டி நல்வலிமையூட்டி
        மண்புகழ் செழிக்க வழிகாட்டினால்
உன் புகழ் சமுகத்தில் உயர்ச்சிபெற்று
        அன்பினால் அகிலமே தழைத்து ஓங்கும்

ஒருவனே தேவன் ஓர்குலம் நாமேயென்று
　　ஒத்த நற்குணத்தை புலங்கொள்ளா மனிதன்தன்னை
கருடனே காலனே உன்குலம் ஒழிகவென்று
　　குடிகெடும் வார்த்தைகளை உரைத்திடாமல் அவனை
கடிபுகழ் நாதனே உன்னால் புகழ்தரமுடியுமென்று
　　பண்புறும் போதத்தால் குணாளனாக்கி விட்டால்
விடிவற்ற நாடுஇங்கே ஒற்றுமை கொண்டுஇன்றே
　　மடியற்று வாழும் இலங்கை - மண்நன்றே

குழம்பும் குட்டையில் எருது போன்றுலகை
　　குழப்பும் கெட்டசெயல் கொள்மனிதர் தம்மை
அழுக்கும் அவலமும் அவாவும் ஆணவமுமற்றவராய்
　　பழுத்த நல்லறிவுடை கற்றவராய் இங்கே
எதற்கும் பயங்கொள்ளாமல் எடுத்த காரியம் முடிப்பவராய்
　　சமைத்து இங்கே வெற்றி கண்டால்
எதிர்க்கும் ஏதிலாரை கொன்று வென்று
　　உதிக்கும் புதுவுலகம் எமக்காய் வேறொன்று

நாசொல்லும் வார்த்தையில் வழுவைக் கொண்டு
　　நாதியற்று வாழுமிந்த மனிதன் தன்னை
நாடவல்ல நல்வழியை காட்டிச் செல்லும்
　　பலநூல் கற்று பக்குவம் தான்கொண்டு
தேடவல்ல புதுமைகளை தேடி நீயும்
　　விஞ்ஞான உலகிதில் உயர்ந்து நின்று
தேடற்கரிய புகழ்செல்வம் பெற்று விட்டால்
　　உயர்ந்திடும் நம்சமூகம் நன்றாய் இன்று

தன்னலம் கருதியிங்கு தளர்வு கொண்டு
　　மண்டலம் தனில்வாழும் மனிதன் தன்னை
மன்னுமுன் நற்குணத்தால் தயவு கொண்டு
　　மின்னிடும் மதிப்புமிகு வைரம் போல
பன்னெடுங் காலம்வாழும் பண்புகள் அவனிலே வளர்த்து
　　பிறர்நலம் காக்கும் நல்ல மனிதனாக்கின்
மின்னிடும் உன்புகழ் பெற்ற கல்விபோல
　　உயர்வுறும் உன்சமூகம் இமயம் போல

நாரதர் சகுனி போன்று எம்முடன் இருந்துகொண்டு
எம்குறை எங்கணும் சொல்வோர் தம்மை இன்றே
நேராக எதிர்த்து நின்று எதற்குமே துணிவுகொண்டு
நேரான உனது பேச்சால் திருத்து - அன்றேல்
வீரநின் கரங்கள் தம்மால் விரட்டிடு உன்னைவிட்டு - பின்
பாரில் உயர்ந்த வனாய் வாழ்ந்து வந்தால்
தீயவுன் குறைக ளெல்லாம் வானவில் போல இன்றே
மறையு மிதை நீ அறிந்து செயல் கொள்வாய்

இன்னுயிர் மாளக் கேட்டு மகிழ்ச்சி தானுற்று
மன்னுயிர்மேல் தயவு கொள்ளா மனிதனை
பின்னிய அன்பினால் அவர்க்கு அன்புப் பாலூட்டி - நீ
அவனை அருளாள எனும் நிலையூட்டி விட்டால்
தன்னிகர் இல்லா தமிழின் தலைவன் நீயென்றும்
எண்ணிய செயலை எதிர்ப்பவரை ஒடித்து நின்றால்
உன்புகழ் உலக மெல்லாம் உதிக்கின்ற சூரியனைப்போல்
என்றென்றும் நின்று எம்மவரை உயர்த்தி நிற்கும்

மாசுற்று வாழ்ந்து இங்கு இன்னல் கொண்டு
மாசற்ற பொன், மணிவைரம், ரத்தினங்கள்
தூசென்று நினையாமல் துன்பமுற்று வாழ்கின்ற மனிதரை - நீ
அவாவற்று அந்தண்மை அடங்கங் கொண்ட நல்ல
காசற்ற மனிதனாக கற்றநல் அறிஞனாக இந்த
காசினியில் அவனை கால்பதிக்க வைத்து விட்டால்
வாசமற்ற மலர்கள் போலஇங்கே இருக்குமுன் சமுகம்
கோசமுடன் எழுந்துவரும் வீரம்பெற்ற கோளரி யென்ன

# இறைவனுடன் ஓர் நேர்காணல்

அன்னைக்கும் உயிரே! அழகுப் பெருநிலவே!
என்னுள்ளே நின்றே இலங்கும் தமிழ்ச்சுடரே!
உன்னை நான் தொழுதேன் எனது தமிழாலே!
மண்ணிது செழிக்க நேர் காணவந்த
எண்ணத்தின் எழிலே! அலகில் அன்புருவே!
வண்ணத்திருவே! உனக் கெனது தமிழ் வணக்கம்.

**கேள்வி :** வாய்மையின் கருவே! மார்க்கத்தின் வடிவே!
தூய்மையின் உருவே! தூக்கத்தின் கனவே!
தாய்மைக்கும் கருவே! ஏழ்மைக்கும் இறையே!
ஆய்பொருள் அறிவே! துய்யவன் நீயே!

வாழ்க்கையின் திருவே! மனிதன் இங்கே
வீழ்கின்ற நிலைமாறி விடியலின் பொழுது
தாழுமிப் புவியில் தேடியே வரவும்
சூழும்எம் குறையே தீரவும் வழிசொல்?

**இறைவனின்**
**பதில் :** விழுமியப் பொருளை மறந்த என்மனிதா! – உனை
தழுவிய இருளை மாற்றிட வழிகேள்!
கழுவிய அறிவால் துலங்கிட துணிந்தே
மழுங்கிய நெறியை மலர்ந்திட செய்தால் – உனை
வீழ்த்திட்ட குறைகள் உலர்ந்து போய்விட
விளங்கிடும் அகிலம் விடியலை நோக்கியே.

**கேள்வி :** மங்கலத் தருவே! மாத்தமிழ் உருவே!
மணமலர் மணமே! திங்கள்தன் அழகே!
அங்கமில் உருவாய் தங்குமென் இறையே!
எங்களின் மனமே மகிழவொரு வழிசொல்?

பதில் : பங்கம் நிறைந்த பாரிதன் மேலே
மங்கலம் குறையும் மானிடன் வாழ்வில்
எதிலுமே நிறைந்த மனதினை வளர்த்திட
தங்கிடும் தயவு தந்திடும் மகிழ்ச்சி.

கேள்வி : அறிவதன் பொருளே! ஆனந்தப் புனலே!
தெளிந்தநல் அறிவே! தீமையின் அனலே!
இழிந்தஇப் புவிக்கு அமைதியைத் தரவே
அவதாரம் எடுப்பது எப்போது இறையே?

பதில் : சத்துருக் கழைய பத்தாமுருக் கொண்டு
செத்திடும் கொடிய போரேதும் வேண்டாம்
இப்புவி கொண்ட பக்தனின் அறிவை
வித்தென விதைக்க சத்தடைந்து உலகத்திலே
உற்றவுன் குறைகள் தெற்றென விலக
வெற்றிகள் விரைந்து வேண்டிடும் அமைதியே.

கேள்வி : அன்புடை வடிவமே! தென்புசால் தெய்வமே!
என்புகழ் உலகிலே எங்கணும் விளங்கவும்
என்னுடை உலகை அடக்கி நான் கொள்ளவும்
நான்மறைப் பொருளே! நவின்றிடு நல்வழி.

பதில் : உன்னை நீ அடக்கியே துர்க்குணம் நீக்கியே
எதிரியை மடக்கியே நன்நெறி புகல்விக்க - உலகம்
உன்னையே வாழ்த்துமே அக்கணம் வணங்கியே
எந்தனின் பதிலிதே ஏணிபோல் நீ உயரவே - மேலும்
என்னையே அடைய எண்ணிய மனிதர்கள்
கண்ணிலே துலங்கிடு தன்னலம் கருதாமல்
மண்ணிலே விளங்கிட நன்னயம் செய்து
உன்னிலே மிஞ்சிடும் நல்மனம் வளர்த்திட
மண்ணிலே எஞ்சாது துர்க்குணம் எதுவுமே - அப்போது
மண்வளம் விஞ்சியிங்கே மணம்பெற்று திகழுமே.

பண்நெடும் காலமும் பண்பட்டுவாழ நீகேட்கும்
உந்தனின் கேள்விகட்கு என்னிடம் விடையுள - ஆனால்
எந்தனக்கு நிறைய மேலிடத்தில் வேலையுள - எனவே
எனக்கு நீ விடைதந்து அனுப்பிடுவாய் நான் வீடேக.

அதற்கு :

தென்றலின் சுகமே தேன்தரும் சுவையே
கன்றிதன் வாயிலே ஒலித்திடும் அகரமே - உலகு
பண்புற வெண்ணியே கேட்க வந்தேன் கேள்விகள் - நீயோ
தன்செயல் ஒன்றையே கருதிநீயும் எழுந்துவிட்டாய் - ஏன்
உன்செயல் தன்னிலே பிழைகள் காண்போமென்றா? அல்லது
பண்நெடுங் காலத்து இறையெனும் பதவியது
பொன்றிடும் என்றா? விடைகூற மறுத்தாய் எனினும்
இன்னுரைத்த பதில்களுக்கு என்தமிழ் வணக்கம்.

# மேன்மையுற்று வாழ்வதற்கு.

நெஞ்சினில் நினைவிருக்கு நேர்மை திறனிருக்கு
பஞ்சமில் துணிவிருக்கு பார்வையில் அறிவிருக்கு
துஞ்சிடா உழைப்பிருக்கு சோர்வினை உடைப்பதற்கு
மஞ்சமாய் வாழ்வைமாற்றி வாழ்ந்திடு மகிழ்ச்சி பொங்க.

மண்ணிலே நீரிருக்கு வெட்டினாம் எடுப்பதற்கு
உன்னிலே திறனிருக்கு ஊருக்காய் உழைப்பதற்கு
கண்ணிலே நீர் எதற்கு கவலையின்றி இருப்பதற்கு
பண்ணிலே சுரமிருக்குஅப்போதுன் புகழ் பாடுதற்கு.

இன்பமுடை தமிழிருக்கு இன்னலுறும் தமிழனுக்கு
தண்ணமுடை நிலவிருக்கு இன்னும் நூறுகவி புனைவதற்கு
எண்ணமது சிறப்பதற்கு எண்ணில்லா நூலிருக்கு
உன்மனது உயர்ந்துவிட ஓடிவிடும் தீமையெல்லாம்.

துன்பமெனும் சொல்லெதற்கு துணிவுடன் நீ - ஒழுகுதற்கு
அன்புஎனும் விளக்கிருக்குநீ அணையாது ஒளிர்வதற்கு
வீம்புமிக்க குணமெதற்கு குவலயத்தில் வாழ்வதற்கு
உன்புகழை உலகுணர்த்து உன்னவலங்களை ஓட்டுதற்கு.

தனத்திலே ஆசையுற்று அலைவதேன் விலங்குபோன்று
இனத்திலே மாசைக்கொன்று உயர்வுறு களைப்பைவென்று
குணத்திலே காசைவென்று நிலைத்திட உதவல்நன்று
மனத்திலே மாற்றங்கொன்று உலகிலே உயர்ந்து நில்லு!

ஞாலமெல்லாம் நிலமிருக்கு காலமெல்லாம் வாழ்வதற்கு
தூலமறக் கற்பதற்கு நூல்களெல்லாம் நிறையவுண்டு
ஏதமற நிற்பதற்கு மாந்தரெல்லாம் துணிவுகொண்டு
கோதற நடப்பதற்கு கீதைசொன்ன வழிகளுண்டு.

கையிலே உரமெதற்கு ஓயாது உழைப்பதற்கு
பையிலே பணமெதற்கு வரையாது கொடுப்பதற்கு
சொல்லிலே திறனெதற்கு குறைவிலா அறனுரைப்பதற்கு
பெண்ணிலே திறனிருக்கு நிறையுலகை சமைப்பதற்கு.

பூவிலே தேனெதற்கு வண்டுகள் சுவைப்பதற்கு
பாரிலே நிலவெதற்கு இரவிலே ஒளிகொடுப்பதற்கு
நாவிலே சொல்லெதற்கு நல்லன உமிழ்வதற்கு - ஊருடன்
சேர்ந்து கொண்டு உழைத்திடு ஒற்றுமை ஓங்குவதற்கு.

தீயிலே சூடெதற்கு தீயோரை எரிப்பதற்கு
கையிலே ஏடெதற்கு கற்று நீ உயர்வதற்கு
உன்னிலே உரமிருக்கு உலகினை வெல்வதற்கு - இதை
எண்ணவே மனமிருக்கு உணர்ந்து நீ நடப்பதற்கு.

காலிலே நடையிருக்கு கற்குமிடம் செல்வதற்கு
உடலிலே உயிரிருக்கு மற்றவர்க்காய் உழைப்பதற்கு
கடலிலே படகெதற்கு மாந்தர்களை கரைசேர்ப்பதற்கு
உலகிலே காழ்ப்பெதற்கு உணர்விழந்து மரிப்பதற்கு.

ஆசையுள்ள வாழ்வெதற்கு பூமிவிட்டு போகுமுன்பு
ஓசையுள்ள வளையெதற்கு தீயவர்கள் வவ்வமுன்பு
வசையுள்ள சொல்லெதற்கு புகழ்பெற்று வாழ்வதற்கு
இசையுற்றே வாழ்ந்திருந்து இன்பங்கொள் உலகிலின்று!

உள்ளமென்ப துள்ளவருக்கு கள்ளமற்ற செயலிருக்கும்
நல்லதுவே செய்பவருக்கு வல்லஇறை துணையிருக்கு
இல்லமென்பது செழிப்பதற்கு நல்லகோதை உழைப்பிருக்கு
எவ்வமென்பது ஒழிப்பதற்கு உள்ளபாதை உன்கையிலிருக்கு.

பறவைக்கு சிறகெதற்கு பாரெங்கும் பறப்பதற்கு
உறவுக்குள் பகையிருக்கு உணர்ந்து கொண்டிங்கு - நல்
அறத்திற்கு உரமிருக்கு உலகோரை உய்விப்பதற்கு
வரவுக்கு செலவிருக்கு புரிந்துகொள் மனிதவாழ்வை நன்கு.

# மண்ணுக்குள் போவதற்கு முன்பு

கண்ணிலே கருணை யற்று
மண்ணிலே மானம் விற்று
பெண்ணிலே மோக முற்று
பேடியாய் சிறுமையுற்று
புண்ணிலே புழுதியைப் போல்
புவியினில் வாழ்வதேனோ?

கல்லொடு காடுகளனி என்று
பல்பொருள் தேடி அலைந்து
செல்வத்தில் ஈடுபாடு கொண்டு
நல்வழி கெட நடந்து
செல்வதால் வீடுநாடு விளங்குமோ - உயிர்
கொல்வதால் நற்சுகம் கிடைக்குமோ?

அடித்தள மாடுமகத்தினைப் போன்று
படித்ததை மடியச் செய்து - நம்முயிர்
குடிக்கவே நாடும்பகைவனை இன்றே
புறங்காட்ட செய்ய வென்று
வெடித்த நம்கொள்கைகள் எல்லாம்
மிடியுற்ற ஏழைபோல வாடலாமோ?

பங்கங்கள் நடப்பதைக் கண்டு
படுக்கையறையில் பள்ளி கொண்டு
அங்கங்கள் வலுவிழந்ததைப் போன்று
சிங்கத்தின் வீரத்தை கைவிட்டு
திங்கள் முகில்கண்டு மறைவதைப் போன்று
செங்காட்டுப்புலி கோழையாய் இருக்கலாமோ?

மண்ணினில் ஆசை யுற்று
மனிதர்கள் பலரைக் கொன்று
பெண்மீதினில் பேதமை கொண்டு
பேராசையால் பெருமை கெட்டு
பொன்னாசையால் புகழை விற்று - இவை
மண்மீதிலே நீ விழ முன்பு ஏனோ?

உண்மையின் உயிரை விற்று
உறக்கத்தில் உடலை விற்று
கண்ணினில் களங்க முற்று
இரக்கமில் மனதைக் கொண்டு
உன்னிலே உயர் கொள்கை யற்று
உலகத்தில் நீயும் உய்யலாமோ?

உள்ளத்தில் உறுதி யற்று
உணர்விலே வலிமை அற்று
பள்ளத்தில் விழுந்ததைப் போன்று
துன்பத்தில் துவண்டு கொண்டு - ஆசை
வெள்ளத்தில் மிதந்து இங்கு
வாசமற்று நீயும் வாழ்வதேனோ?

உண்மைக்கு உயிராய் நின்று
உலகுக்கு ஒளியாய் இங்கு - நல்
தன்மைக்கு நீயே என்று
தவறுகட்கு தள்ளி நின்று
மண்ணிற்குள் போகும் முன்பு
மனிதன் நீயும் வாழலாமே?

## மண்முனைப்பற்று ப. நோ. கூ. சங்கம்

நுகர்ச்சிச் சேவை, போக்குவரத் துச்சேவை, எரிபொருள் சேவை கிராமிய வங்கிச்சேவை, நகை யடவுபிடித்தல், புகைப்படம் பிர திச்சேவை, கதிரை வாடகை ஆகி யவற்றிற்கு நாடவேண்டிய நாணயமுள்ள இடம் ஆரை யம்பதியில் அமைந்துள்ள மண் முனைப்பற்று **ப.நோ.கூ..சங்கம் ஆரை யம்பதி.**

## நன்றிக்குரிய நிறுவனங்கள்

1. விஜயா மோட்டர்ஸ்
2. சுபா நகை மாளிகை
3. ஜெயா வீடியோ சென்ரர்
4. **Tip-Top** பாமசி

Batticaloa

பாடசாலை

*அபிவிருத்திச் சங்கம்* மற்றும்

பாடசாலை

*பழைய மாணவர்* சங்கம்

அனைவருக்கும்

எனது


மனமார்ந்த நன்றிகள்

MJ The MODERN Jewellery

No. 18, Central Road,
Batticaloa.
T.P. 22528

No. 32, Beach Road,
Kattankudy - 04
T.P. 45081

R



RIO STEEL FURNITURES
றியோ ஸ்டீல் பேர்னிசர்ஸ்.
DEALERS IN OFFICE AND HOUSE HOLD ITEMS.
MAIN STREET, KATTANKUDY
065-47060(RES)

THEVI Jewellers
For fine 22kt Jewels
இல. 25. முனை வீதி. மட்டக்களப்பு
Tel : 24155, 23991


SH
சுத்தமான 22 கரட்
தங்க நகைகளுக்கு
சரவணாஸ்
நகை மாளிகை
261/2, திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு.
T.P : 065-24613

New MARLIYAS
உயர்தர கூறைச்
சேலைகளுக்கு
மட்டு நகரில்
நியூ
மர்ழியாஸ்



இல. 82. பிரதான வீதி.
மட்டக்களப்பு. T.P.No: 065-22900

VIDEO Filming,
Photography
Studio
Jayani
Colour and Black & White



P. JEYANDRAN (I.VO.Pg.Dep in india)
Direct Dealer For Fuji Film
No. 293, Trinco Road, Reg No. D380
Batticaloa. T.P. 065-23201

"காத்தநகரின் மக்களபிமானமிக்க மூத்த புத்தக நிலையம் மாலின்ஸ்"
எங்களிடம்......

- பாடசாலைப்பயிற்சிப்புத்தகங்கள்
- அப்பியாசக் கொப்பிகள்
- காகிதாதிகள்
- விளையாட்டுப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- வாழ்த்து அட்டைகள்
- தையல் பொருட்கள்

ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

"மாலின்ஸ்"

பிரதான வீதி, காத்தான்குடி - 01
செலான் வங்கிக்கருகில்
T. P. : 065-45476



- நம்பிக்கை !
- நாணயம் !
- நேர்மை கொண்ட !!!

ஆர்த்தி ஜீவலர்ஸ்


இல. 22, மெயின் வீதி,
மட்டக்களப்பு.
T. P. : 065-2305

காண்ணாடி தேவைகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

இன்று முதல் மூன்று மாத காலத்திற்கு எமது ஸ்தாபனம் விசேட விலைக்கழிவில் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.



பிளாஸ்டிக் பிரேமில் ரூபாய் 500/- க்கும்
வெளிநாட்டு உலோக பிறேமில் ரூபாய் 1000/- க்கும்
உட்பட்டதாகவுள்ளது.





20 வருடம் பழமை வாய்ந்த ஒரே ஸ்தாபனம்

மட்டக்களப்பு மூக்குக் கண்ணாடி ஸ்தாபனம்

**75B**, முனை வீதி, (மினிபஸ் நிலையம் முன்பாக)
மட்டக்களப்பு.

M Y O W N
COMPUTER SYSTEMS (PVT) LTD.

"We Train Tomorrow's People Today"



# 319, Trinco Road,
Batticaloa.
TP : 06524845
E-Mail : myownb@sltnet.lk

காத்தான்குடி மண்ணில் முதன் முதலாக இந்தியாவிலிருந்து ஆடைகளை நேரடியாக இறக்குமதி செய்து விற்பனை செய்வதை அறிமுகப்படுத்திய ஒரே ஆடையகம் காத்தான்குடி மெயின் வீதி இரும்புத் தைக்கா பள்ளிவாயலுக்கு அருகாமையில் அமைந்துள்ள.

இந்தியன் செலக்ஷன்

சாரி வகைகள்
சல்வார் கமீஸ்
சேர்ட் வகைகள்
T சேர்ட்
சிறுவர்களுக்கான ஆடைகள்
சாரண்கள்
பட்டு வேட்டிகள்

அதுமாத்திரமல்ல, T.P : 065-45423
பெண்களுக்கான அழகுச்சாதனப் பொருட்கள்
***Borosoft Fair & Lovely*** போன்ற கிறீம் வகைகளும்

மிற்சுவி, அற்லஸ் சீமேந்து, ஸ்டார் ஓடு மற்றும் CIC லொயர் மரம் ஆகிய வற்றில் மொத்த சில்லறை வியாபாரி.

ANCHENEYE CEMENT
&
HARDWARE DEALERS

T.P : 22431 / 24794

38, PIONEER ROAD,
BATTICALOA.

தரமான பாண், பணிஸ் மற்றும் சிற்றுண்டிக்கும் சிறந்த உபசரிப்புக்கும் 50 வருட அனுபவத்தோடு புதுப்பொலிவுடன் மக்கள் அலை போதும்.

New Empire
Bakery



Fatima Building,
58B, Trinco Road,
Batticaloa.
T.P. No : 23105, 24196

நேர்த்தியான டிசைன்களில்
கண்கவர் நகைகளை
உங்கள் எண்ணம்போல் வழங்குகிறது.
தரத்திலும் தங்கத்திலும் முதலிடம் வகிக்கும்.

# மகாலெட்சுமி நகைமாளிகை

ஓடர் நகைகள்
குறித்த
காலத்தில் 22
கரட்டில்
உத்தரவாதத்துடன்
செய்துதரப்படும்.




261, A திருமலை வீதி,
மட்டக்களப்பு.

# திவானி ரெஸ்ருடன்ட்

தனி உழுந்து பருப்பு
வகைகளுக்கும் தரமான
உணவுகளுக்கும்
குளிரூட்டப்பட்ட
பானங்களுக்கும்.
நொறுக்கத் தீனிகளுக்கும்
உள்ளங் குளிர்ந்த உபசரிப்புக்கும்
மறு பெயர்
**"திவானி ரெஸ்ருடன்ட்."**

# லெட்சுமி பவான்


தனி உழுந்து பருப்பு
வகைகளுக்கும் தரமான
உணவுகளுக்கும்
குளிரூட்டப்பட்ட
பானங்களுக்கும்.
நொறுக்கத் தீனிகளுக்கும்
உள்ளங் குளிர்ந்த
உபசரிப்புக்கும் மறு பெயர்
**"லெட்சுமி பவான்."**

# மண்முனைப் பற்று ப.நோ.கூ.சங்கம்

வாடிக்கையாளர்களே !
நுகர்ச்சித் தேவையா?
எரிபொருள் விற்பனையா?
கிராமிய வங்கிச்சேவையா?
நகைபிடித்தலா?
புகைப்படப்பிரதி சேவையா?
கதிரை வாடகையா?
போக்குவரத்துச் சேவையா?
இன்னோரன்ன சேவைக்கு
நாடவேண்டிய முதன்மையான இடம்
மண்முனைப்பற்று ப.நோ.கூ.சங்கம்
என்பதை மனதில் கொள்ளும்படி
கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்
மண்முனைப்பற்று ப.நோ.கூ.சங்கம்
ஆரையம்பதி.

## நூலாசிரியர் பற்றி....



மட்டுமாநகரின் மணிவிளக்காம் ஆரையம்பதி, கல்விமான்களையும் கலை இலக்கிய ஆர்வலர்களையும் அரச ஊழியர்களையும் அதிகமாகக் கொண்ட பழம் பெரும்பதி, இப்பெருமைக்குரிய மண்ணில்தான் திரு. சின்னத்தம்பி சிவசிதம்பரம் (கடதாசி ஆலை இலிகிதர்) திருமதி வள்ளியம்மை சிவசிதம்பரம் (ஆசிரியை) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாக 1985. 01. 02ல் மலர்ந்தான். மட் / ஆரையம்பதி இ. கி. மி. பாடசாலையில் அரங்கேறிய "குந்தியின் மடியில்" "விசுவாமித்திரர்" ஆகிய இரு நாடகங்களும் நடிப்பாற்றலுக்கு முத்தாய்ப்பாக அமைந்தன. பல பொது மேடைகளிலும் அரங்கேற்றப்பட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றன.

பாடசாலை மற்றும் பொது நிறுவனங்கள் நடாத்தும் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பங்கேற்று முதற்பரிசுகளை வென்றுள்ளார். இவ்வகையில் முக்கலைகளிலும் தணியாத தாகம் இருந்தது. இதுவே கவிதை படைக்கும் முயற்சிக்கும் வித்திட்டது.

தற்போது மட் / சிவானந்தா தேசியப் பாடசாலையில் க.பொ.த. (உ/த)விஞ்ஞானப்பிரிவில் கல்வி கற்கும் சி. ரஜிவ்காந்த் தமது செயற்றிட்ட ஒப்படையாக "தேடும் தேசம்" கவிதைத் தொகுப்பினை ஆக்கியுள்ளார்.

இதனை நூலாக வெளியிட வித்தியாலய அதிபர் திரு. பீ. ஆனந்தராசா அவர்களும் ஆசிரியர்களும் ஊக்கம் தந்தமையால் இச்சிறு நூலை இலக்கிய அன்பர்களின் கரங்களில் தவழவிட இயன்றுள்ளது.

இவ்விளைஞனின் கன்னிமுயற்சி வெற்றியளிக்க சான்றோரும் தனவந்தர்களும் உதவுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

— ஆரையூர் குழந்தை

செலக்ஷன்-அக்கரைப்பற்று.